ஜூலை - ஆகஸ்ட் 2024 தமிழாக்கம்

# The Herald of Christ's Kingdom



## காலத்தின் முடிவு


- அர்ப்பணிப்பு
- யூதாவின் குணம் யோசேப்பின் மூலம் வெளிப்படுத்தப்பட்டது
- கிறிஸ்துவை பிரசங்கித்தல்
- யெகோவா தேவனிடமிருந்து ஒரு பனித்துளி
- அவரை குத்தினவர்களும்
- மூன்று கட்டங்களில் மீட்பு
- எசேக்கியேல் 38

# காலத்தின் முடிவு

## ஆதியிலே



சுவிசேஷ யுகத்தின் அறுவடை இந்த யுகத்தின் முடிவுக் காலமாகும். இது மத்தேயு13:39-லிருந்து தெளிவாகிறது, அங்கு இயேசு அறுவடையை யுகத்தின் (அயோனோஸ்) சன்டெலியா அல்லது முடிவடையும் காலம் என்று வரையறுத்தார். 1874 இல் கிறிஸ்து திரும்பியதிலிருந்து, 150 ஆண்டுகளாக இந்த முடிவுக் காலத்தில் நாம் இருக்கிறோம். இது அறுவடையின் ஆரம்பத்தில் கணித்ததை விட நீண்டது. இருப்பினும், இந்த காலகட்டத்தின் இறுதிப் பகுதியை நாம் இப்போது நெருங்கி வருகிறோம் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது.

இந்த இதழ் அர்ப்பணிப்பு பற்றிய கட்டுரையுடன் தொடங்குகிறது. ஒரு கிறிஸ்தவரின் வாழ்க்கை, அர்ப்பணிப்பு மற்றும் பரலோக நம்பிக்கைகளின் ஒரு முக்கிய விஷயமாகும். பரலோக அழைப்பிற்கான கதவு திறந்தே உள்ளது. ஆனால் வருடங்கள் முன்னேறி வருவதால், இன்னும் உறுதியளிக்காத ஒவ்வொரு நேர்மையான விசுவாச இருதயமும் விரைவில் நுழைய சாதகமாக இருக்கிறது.

இரண்டாவது கட்டுரை குணலட்சணம் பற்றியது, கிறிஸ்தவ வளர்ச்சிக்கு முக்கியமானது. இந்தக் கட்டுரை பழைய ஏற்பாட்டில் உள்ள ஒரு உதாரணத்திலிருந்து எடுக்கப்பட்டது, யூதா லேயாளால் யாக்கோபுக்கு பிறந்த நான்காவது குமாரன், அவர் இஸ்ரயேலின் பிற்கால ஆட்சி அதிகாரத்தின் ஆதாரமாக இருந்தார். இந்தக் கட்டுரை, தேவனின் இத்தகைய ஆசீர்வாதத்திற்கு வழிவகுத்த குணநலன்களின் வளர்ச்சியைப் பற்றிய ஒரு பார்வையாகும். இஸ்ரயேலின் இராஜரீக பரம்பரையில், கிறிஸ்துவைப் பற்றியும் சபையைப் பற்றியும் தீர்க்கதரிசனமான ஒன்றைக் காண்கிறோம்.

மூன்றாவது கட்டுரை இயேசுவின் மீது கவனம் செலுத்துகிறது, அவருடைய தியாகத்தில் ஈடுபட்டுள்ள நாட்கள் மற்றும் நேரங்களைக் குறிப்பிடுகிறது. மேலும் இவை கிறிஸ்துவின் பாதையில் பின்பற்றும் யூத மற்றும் புறஜாதி விசுவாசிகளின் ஆசீர்வாதங்களுடன் எவ்வாறு தொடர்புபடுகின்றன என்பதை கருதுகிறது.

கடைசி நான்கு கட்டுரைகள் இஸ்ரயேலை தீர்க்கதரிசனமாக கருதுகின்றன, கிறிஸ்துவின் இராஜ்யத்தைத் தொடங்குவதில் இஸ்ரயேல் ஆயத்தமாகும் தீர்க்க தரிசனத்தைக் குறிக்கிறது.

மீகா 5 பற்றிய ஒரு கட்டுரை சிதேக்கியாவின் வீழ்ச்சியிலிருந்து நவீன காலம் வரையிலான 2500 ஆண்டுகளுக்கும் மேலான காலப்பகுதியின் கண்ணோட்டத்தைக் காட்டுகிறது. சகரியா 12 ஐ பற்றிய கட்டுரை, இராஜ்யத்தின் அறிமுகத்திற்கு வழிவகுக்க இஸ்ரயேல் அனுபவிக்க வேண்டிய நான்கு மோதல்களை குறிப்பிடுகிறது.

மூன்று கட்டங்களில் மீட்பு என்ற கட்டுரை 1978 முதல் இஸ்ரயேலின் மூன்று பரந்த அனுபவங்களைப் பார்க்கிறது - அவர்களின் அரபு அண்டை நாடுகளுடன் போர், பின்னர் அவர்களுடனான சமரச பேச்சுவார்த்தை, பின்னர் இஸ்ரயேலுக்கான வாக்குறுதியளிக்கப்பட்ட நிலத்தின் சில பகுதிகளை மீட்டெடுப்பது.

இறுதியாக, எசேக்கியேல் 38ஐக் கருதுகிறோம், இது ஆசீர்வதிக்கப்பட்ட இராஜ்யத்தை அறிமுகப்படுத்துகிறது, இன்னும் நிலுவையில் உள்ள கடைசி மோதலை பற்றி கூறுகிறது.

இந்த இதழ் ஊழியம் பக்தி மற்றும் குணலட்சங்களை ஊக்குவிக்கும் என்று நம்புகிறோம், எங்கள் நம்பிக்கையை அடைவதற்கான நேரம் குறைவாக உள்ளது என்பதையும் உணர்கிறோம்.

### ஜூலை / ஆகஸ்ட் 2024, தொகுப்பு 106, எண் 3

**அர்ப்பணிப்பு**
ஜீவபலி

**யூதாவின் குணம் யோசேப்பின் மூலம் வெளிப்படுத்தப்பட்டது**
குணநலன்களின் மேம்பாடு

**கிறிஸ்துவை பிரசங்கித்தல்**
இயேசு பலி செலுத்தின நேரம்

**யெகோவா தேவனிடமிருந்து ஒரு பனித் துளி**
நீண்ட வரலாறு சுருக்கமாக

**அவரை குத்தினவர்களும்**
நான்கு யுத்தங்கள்

**மூன்று கட்டங்களில் மீட்பு**
மாநில அந்தஸ்து, சமாதான ஒப்பந்தங்கள், நிலத்தைப் பாதுகாத்தல்

**எசேக்கியேல் 38**
இறுதி மோதல்

**இன்றைய தீர்க்கதரிசனம்**
இஸ்ரயேலுக்கு எதிரான போராட்டங்கள்

## ஜீவனுள்ள பலி
# அர்ப்பணிப்பு



"நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன், இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை" (ரோமர் 12:1)

***— Extracted from a 2023 Baptismal Service***

ஞானஸ்நானம் பெற இருப்பவர்களிடம் நாம் இந்தக் கேள்வியைக் கேட்க விரும்புகிறோம். "உங்கள் மூளை குழம்பி விட்டதா?" ஒரு விதத்தில், உலகில் உள்ள ஒருவர் உங்களிடம் அந்தக் கேள்வியைக் கேட்பது நியாயமானதாக இருக்கலாம். நீங்கள் கர்த்தருக்கு ஊழியம் செய்ய வாழ்நாள் ஒப்பந்தத்தில் கையெழுத்திடுகிறீர்கள், ஆனால் அவைகளை சரியாக படிக்காமல் விட்டு விடாதீர்கள். கர்த்தர் உங்களுக்கு என்ன அனுபவங்களை வழங்குவார் என்று உங்களுக்குத் தெரியாதே, மேலும் நீங்கள் இனி இந்த உலக லட்சியங்களுக்காக பாடுப்படுவதற்கு அவசியமில்லையே.

ஒரு சந்தர்ப்பத்தில் இயேசு தன்னுடைய ஊழியத்தால் மிகவும் அழுத்தப்பட்டார்," அவருடைய இனத்தார் இதைக் கேட்டபோது, அவர் மதிமயங்கியிருக்கிறார் என்று சொல்லி, அவரைப் பிடித்துக்கொள்ளும்படி வந்தார்கள். (மாற்கு3:21) மதிக்கப்பட்ட மத தலைவர்கள், அவரை நேரடியாக பெயெல்செபூல் என்று குற்றம் சாட்டினார்கள். (மத்தேயு12:24) இயேசு இதனால் கலங்கவில்லை, இந்த முடிவுக்காக நாம் விமர்சிக்கப்பட்டாலும் நாம் கவலைப்படக்கூடாது. இதுவே நீங்கள் எடுக்கும் மிகப்பெரிய முடிவு மற்றும் நீங்கள் செய்யப்போகும் கடினமான காரியமாகவும் இருக்கும். உலகில் உள்ள மற்றவர்களைப் போன்ற அதே அனுபவங்களை நீங்களும் அனுபவிப்பீர்கள் - இன்பம், துன்பம், மகிழ்ச்சி, மற்றும் சோகம். ஆனால் நீங்கள் அதை



அணுகும் முறையில் ஒரு பெரிய வித்தியாசம் காணப்படவேண்டாம். எந்த நிகழ்வும் தற்செயலாக நடப்பத்தில்லை. வாழ்க்கையில் ஒவ்வொரு அனுபவமும் முக்கியமானது. சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது.

### தகுதி உள்ளதா?

அர்ப்பணிப்பைப் பற்றி என்னை கவலையடையச் செய்த ஒரு விஷயம், பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக ஓடுவதற்கு நான் தகுதியானவனா என்பது தான். பலர் இன்னும் அதிக தகுதியானவர்களாக இருந்தார்கள். ஆனால் உண்மையில், நாம் யாரும் இந்த அழைப்புக்கு தகுதியானவர்கள் அல்ல !இது அவருடைய சுத்த கிருபையே. இது தேவனிடமிருந்து வரும் அன்பான ஒரு பரிசு. "அவர் நம்முடைய கிரியைகளின்படி நம்மை இரட்சிக்காமல், தம்முடைய தீர்மானத்தின்படியேயும், ஆதிகால முதல் கிறிஸ்து இயேசுவுக்குள் நமக்கு அருளப்பட்ட கிருபையின்படியும், நம்மை இரட்சித்து, பரிசுத்த அழைப்பினாலே அழைத்தார்." (2தீமோத்தேயு 1:9) நாம் சிறப்பு வாய்ந்தவர்கள் என்பதால் அவர் நம்மை அழைக்காமல், அவர் நம்மை அழைப்பதால் நாம் சிறப்பு வாய்ந்தவர்கள் ஆகிறோம்.

### சோதனைகள்

நம்முடைய அனுபவங்கள் சிலது மகிழ்ச்சியாகவும், இனிமையாகவும் இருக்கும், சில வலிமிகுந்ததாகவும், கடினமாகவும் இருக்கும். இந்த இரண்டு விஷயங்களிலும் பவுல் இவ்வாறு நமக்கு அறிவுறுத்துகிறார், "எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரம் செய்யுங்கள், அப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக்குறித்துதேவனுடைய சித்தமாயிருக்கிறது." (1தெசலோனிக்கேயர் 5:18) "எந்தச் சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாய்க் காணாமல் துக்கமாய்க் காணும், ஆகிலும் பிற்காலத்தில் அதில் பழகினவர்களுக்கு அது நீதியாகிய சமாதான பலனைத் தரும்"(எபிரெயர் 12:11) இந்த கனிகள் இனிமையாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கின்றன, "அன்பு, சந்தோஷம்,



சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம். " (கலாத்தியர் 5: 22,23) ஒரு மரம் அதிகமான கனிகளை கொடுக்க நீங்கள் என்ன செய்ய வேண்டும் ? நீங்கள் அதை கத்தரிப்பீர்கள். நாம் அதிக கனிகளை கொடுப்பதற்கு கர்த்தர் என்ன செய்கிறார் ? "அவர் அதை நருக்குகிறார்.(யோவான் 15:2) அதிர்ஷ்டவசமாக நாம் சொந்தமாக கிரியை செய்யக்கூடியவர்களாக இல்லாமல், நமக்குள் அவர் கிரியைச் செய்யக்கூடியவராக இருக்கிறார். அவர் நம்மை கத்தரித்தபின், நீதி என்னும் சமாதான கனியைக் கொடுப்போம்.

நாம் கடினமான சோதனைகளை நாம் கடந்து செல்லும்போது - சிரமங்கள் அல்ல, ஆனாலும் கடினமாக, வேதனையுள்ள நீண்ட அனுபவங்கள் மற்றும் மேலும் மேலும் சோதனைகள் சேர்க்கப்பட்டால், நாம் என்ன செய்யவேண்டும் ? விசுவாசிக்க வேண்டும். பரலோக தந்தையை நம்ப வேண்டும்.

நாம் "சோர்வடைவதை" யார் விரும்புகிறார்கள் ? கர்த்தர் நம்மை விட்டு விட்டார் என்றும் எப்படியும் பரம அழைப்பின் பந்தய பொருளை பெறுவதற்கு நாம் ஒருபோதும் தகுதியற்றவர் என்றும் நாம் தோல்வியுற போகும் போருக்காக அனைவரின் நேரத்தையும் ஏன் வீணாக்குகிறோம் என்று தவறாக நினைக்க யார் விரும்புகிறார்கள் ? எதிராளியாகிய சாத்தானானவன். அவன் கெர்ச்சிக்கும் சிங்கம் போல, யாரை விழுங்கலாமோ என்று சுற்றி திரிகிறான்."விசுவாசத்தில் உறுதியாயிருந்து, அவனுக்கு எதிர்த்து நில்லுங்கள், உலகத்திலுள்ள உங்கள் சகோதரரிடத்திலே அப்படிப்பட்ட பாடுகள் நிறைவேறிவருகிறதென்று அறிந்திருக்கிறீர்களே" (1பேதுரு 5:8,9)

நாம் நம் சோதனைகளின் போது தனித்து நிற்பதில்லை. நம்முடன் இருப்பவர் யார் ? இறுதி விளைவு என்ன ? "கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மைத் தமது நித்திய மகிமைக்கு அழைத்தவராயிருக்கிற சகல கிருபையும் பொருந்திய தேவன் தாமே கொஞ்சக்காலம் பாடநுபவிக்கிற உங்களைச் சீர்ப்படுத்தி, ஸ்திரப்படுத்தி பலப்படுத்தி, நிலைநிறுத்துவாராக"(1பேதுரு 5:10)

## நம்முடைய சிந்தையையும், சித்தத்தையும் இழத்தல்

நாம் வேண்டும் என்றே நம்முடைய சிந்தையையும் சித்தத்தையும் விட்டு கொடுக்கவேண்டும். அதற்கு பதிலாக நாம் கிறிஸ்துவின் சிந்தையை அங்கு வைக்கிறோம். "எங்களுக்கோ கிறிஸ்துவின் சிந்தை உண்டாயிருக்கிறது."(1கொரிந்தியர் 2:16) இயேசுவின் மனதில், தன் பிதாவின் சித்தம் செய்யவேண்டும் என்ற ஒரே சிந்தை தொடர்ந்து இருந்தது. "என் சித்தத்தின்படியல்ல, என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்யவே நான் வானத்திலிருந்திறங்கி வந்தேன்" (யோவான் 6:38)

சகோதரர்களே உங்களுக்காக எனது ஜெபம் என்னவென்றால், உங்கள் கிறிஸ்தவ பயணத்தில் நீங்கள் மிகவும் கவனமாகவும் உறுதியாகவும் இருந்து, "எனக்கு என்ன நடந்தாலும், என்னைச் சுற்றி என்ன நடந்தாலும், நான் கடவுளின் விருப்பத்தை மாத்திரமே செய்வேன்." என்று நேர்மையாகச் சொல்ல கூடிய ஒரு நிலையை அடையவேண்டும். அந்த மனப்பான்மைக்கு முழுமையான விசுவாசம் தேவை. மேலும், இடுக்கமான பாதையில் நடக்க தைரியம் தேவை.

இந்த இடத்திற்கு நீங்கள் வந்தபோது

நீங்கள் சற்று கவலையாகவும், பாதுகாப்பற்ற நிலையில் இருப்பதாக உணர்ந்தீர்களா ? ஒருவேளை இருக்கலாம், அப்படியிருந்தும் நீங்கள் இங்கு வந்துவிட்டீர்கள். தைரியமாக இருக்க கர்த்தர் உங்களுக்கு உதவி செய்தாரா ? அதை நீங்கள் உணராமல் இருக்கலாம், ஆனால்,நிச்சயமாக அவர் உதவி செய்கிறார்.

### ஞானஸ்நானம்

ஞானஸ்நானம் என்பது உங்கள் இருதயத்தில் முன்பே நடந்த ஒன்றின் வெளிப்புற அடையாளமாகும். இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுவதன் மூலம் நீங்கள் கர்த்தருக்கு உங்களை அர்ப்பணித்து அவருக்கு ஊழியம் செய்ய விருப்பம் தெரிவித்திருக்கிறீர்கள். மரண பரியந்தம் விசுவாசமுள்ளவர்களாக இருந்தால், ஜீவ கிரீடத்தை பெறுவீர்கள், "சிறு மந்தை" வகுப்பாராக எழுப்பப்படுவீர்கள். இயேசுவைப் பின்பற்றும் விருப்பம் எங்கிருந்து வந்தது ? "என்னை அனுப்பின பிதா ஒருவனை இழுத்துக்கொள்ளாவிட்டால் அவன் என்னிடத்தில் வரமாட்டான் (என்னிடம் வந்து சேரும் விருப்பத்தை அவருக்கு கொடுக்கிறார். )" (யோவான் 6:44)என்று இயேசு கூறினார்.

கடவுள் யாரை இழுத்துக் கொள்கிறார் ? "மாம்சமான யாவரும் தேவனுக்கு முன்பாக மேன்மை பாராட்டாதபடிக்கு"(1கொரிந்தியர் 1:29)பலவீனமானவர்களையும், தாழ்ந்தவர்களையும், இழிவானவர்களையும் அவர் இழுத்துக்கொள்கிறார் என்பதை நாம் 1கொரிந்தியர் 1: 26-28 ம் வசனங்களிலிருந்து அறிந்துகொள்கிறோம்.

வேதத்தில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளபடியே கிறிஸ்தவ ஞானஸ்நானம் பரிந்துரைக்கப்படுகிறது. மத்தேயு 3:16இல் இயேசு யோவான் ஸ்நானகனால் ஞானஸ்நானம் பெற்றார். இயேசு உயிர்த்தெழுந்த பின், "நீங்கள் சகல தேசங்களுக்கு போய், அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுங்கள்" என்று அவருடைய சீஷர்களுக்கு கட்டளையிட்டார். (மத்தேயு 28:19)

ரோமர் 6:3 ல்,"கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றநாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா ? என்று பவுல் கேட்கிறார். 11 ஆம் வசனத்தில் "அப்படியே நீங்களும், உங்களைப் பாவத்திற்கு மரித்தவர்களாகவும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும் எண்ணிக்கொள்ளுங்கள்."(ரோமர் 6:11) ஞானஸ்நானத்தில் "ஒரே சரீரமும், ஒரே ஆவியும், ஒரே கர்த்தரும், ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும் உண்டு" (எபேசியர் 4 :4,5)

### நடைமுறை ஆலோசனை

நாம் முதன்மையாக செய்யவேண்டும் என்று நம்முடைய பரலோக பிதா விரும்பும் இரண்டு காரியங்கள் மத்தேயு 22:37 ல் உள்ளது. " உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்புகூருவாயாக, இது முதலாம் பிரதான கற்பனை...இரண்டாம் கற்பனை என்னவென்றால், உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்பதே"அந்த இரண்டு கற்பனைகளும் எவ்வளவு முக்கியம் என்பதை நாம் புரிந்துகொள்ளவேண்டும் என்பதற்காக 40ம் வசனத்தில், "இவ்விரண்டு கற்பனைகளிலும் நியாயப்பிரமாணம் முழுமையும் தீர்க்கதரிசனங்களும் அடங்கியிருக்கிறது."(மத்தேயு 22:40) என்று இயேசு மேலும் கூறினார்.

அதற்குப் பின் இயேசு, "நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன்." (யோவான்13:34) என்று கூறினார். பின்னர் அவர் "ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை"(யோவான் 15:13) இதுவே உச்சக்கட்ட பலியின் வாழ்க்கை.

நாம் முழு இருதயத்தோடும், ஆத்துமாவோடும்,மனதோடும் கர்த்தரை நேசிக்கும் போது நம் வாழ்க்கை தேவனை சுற்றியே சூழல்கிறது. நாம் வேதத்தில் உள்ள கதாபாத்திரங்கள், அவர்களின் கதைகள், உவமைகள், தீர்க்கதரிசனங்கள் இன்னும் அவைகளின் விசேஷித்த அர்த்தங்களை மனப்பாடம் செய்கிறோம். நம்முடைய வேதாகமம், விளக்கவுரைகள், மற்றும் பக்தி பாடல்களை புரிந்து, பாராட்டுகிறோம். சிலர் வேத வசனங்களை ஃபிரேம் செய்து சுவரில் மாட்டி வைக்கிறார்கள். சிலர் சோபா தலையணையில் வேதாகம வசனங்களை எம்பராய்டரி செய்து வைத்திருக்கின்றனர். முழு இருதயத்தோடும், ஆத்துமாவோடும், மனதோடும் தேவனை நேசிக்கும் மற்றவர்களை நாம் சந்திக்கிறோம்.

கர்த்தரை முழுநேரமும் வணங்குவதற்கான

தடைகள் நமக்கு என்ன இருக்கிறது ?ஒன்றும் இல்லை! நாம் எப்போதும் அவருடைய ஊழியத்தை செய்து கொண்டிருக்கிறோம். "எதைச் செய்தாலும்,அதை மனுஷர்களுக்கென்று செய்யாமல், கர்த்தருக்கென்றே மனப்பூர்வமாய்ச் செய்யுங்கள்"(கொலோசேயர் 3:24 ) நாம் ஒரு நிறுவனத்தை நடத்தலாம் அல்லது பாத்திரங்களைக் கழுவலாம், நம்மால் முடிந்ததைச் சிறப்பாக செய்தால், அது தேவனுக்கு பிரியமானது. அது அவருக்கு மகிமையைக் கொண்டுவருகிறது. இயேசு தம்முடைய விசுவாசத்தினாலும் ஊழியத்தினாலும் தேவனை மகிமைப்படுத்தினார். (யோவான்17:4)நாமும் அவ்வாறே செய்ய வேண்டும்.

## கீழ்ப்படிதல்

"தேவனுடைய வார்த்தையைக் கேட்டு, அதைக் காத்துக் கொள்ளுகிறவர்களே அதிக பாக்கியவான்கள்"(லூக்கா11:28) சில நேரங்களில் நம்முடைய சொந்த சித்தத்தை கொண்டிருப்பதனால் நம்முடைய கீழ்ப்படிதல் தோல்வியுறுகிறது. நம் சித்தத்திற்கு பதிலாக கிறிஸ்துவின் சித்தத்தை வைத்தால், சோதனையை எதிர்ப்போம். கிறிஸ்துவின் சித்தத்தை பெற, வேதத்தை வாசிப்பது மட்டும் அல்லாமல், அதை தியானித்து, உட்கொண்டு, அதை உங்களில் ஒரு பகுதியாக ஆக்குங்கள். வேதத்தை மேற்கோள் காட்டி இயேசு சோதனைகளை எதிர்த்தார். "வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது, தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும் சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜன முள்ளவைகளாயிருக்கிறது" (2தீமோத்தேயு3:16,17)

## மனத்தாழ்மை, பயபக்தி, ஜெபம்

இயேசு ஒரு அடிமையின் ரூபம் எடுத்த போது, அவர் மனத்தாழ்மையை வெளிப்படுத்தினார். மற்றவர்களை விட புத்திசாலியாகவும், வலிமையாகவும், வெற்றியாளராகவும் பழகியவர்களுக்கு, தாழ்மையுடன் இருப்பது சிரமமாக இருக்கலாம். நாம் தாழ்மையுடன்இருக்கும் போது, நாம் கற்றுக் கொள்ளக்கூடியவர்களாக இருக்கிறோம் - கற்றுக்கொள்ள நிறைய இருக்கிறது.

"கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்" (நீதிமொழிகள் 1:7) "மூடர் ஞானத்தையும்



போதகத்தையும் அசட்டைபண்ணுகிறார்கள்" நம்முடைய அர்ப்பணிக்கப்பட்ட வாழ்க்கையில் எந்த கட்டத்தில் நாம் கற்பிக்கப்பட அவசியம் இல்லை என்று சொல்லலாம் ? ஒருபோதும் இல்லை. ஒவ்வொரு நாளும், நாள் முழுவதும், ஜெபத்தின் வழியாக தேவனுடன் நெருக்கமாக இருங்கள்.

ஆவிக்குரிய முதிர்ச்சியின் அளவுகோல் என்பது தேவனுடன் தொடர்புகொள்வதில் செலவழித்த நேரங்களின் சதவீதமாகும். அர்ப்பணிப்பின் தொடக்கத்தில், சதவீதம் குறைவாக இருக்கும். அதை எவ்வாறு அதிகரிப்பது என்பதை குறித்த பரிந்துரை இதுவே - நாளின் மூன்று வெவ்வேறு நேரங்களில் கவனம் செலுத்துங்கள் . (1)நீங்கள் முதலில் துக்கத்திலிருந்து எழுந்திருக்கும் நாளின் ஆரம்பம். (2)நீங்கள் தூங்க போகும் நாளின் முடிவு. (3) இடையில் உள்ள மற்ற எல்லா நேரங்கள். ஒன்றும் இரண்டும் எளிதானது. ஆனால் மூன்றிற்கு பயிற்சி தேவை.

(1) நீங்கள் காலையில் எழுந்தவுடன், "காலை வணக்கம் கர்த்தரே" என்று சொல்வதை வழக்கமாக்கிக் கொள்ளுங்கள். இளைப்பாறுதல் கொடுத்ததற்கு அவருக்கு நன்றி செலுத்தி, அந்த நாளை அவர் ஆசீர்வதிக்க ஜெபியுங்கள். மேலும் உங்கள் வார்த்தைகளையும் கிரியைகளையும் அவர் வழிநடத்த வேண்டுங்கள். ஏதேனும் குறிப்பிட்ட சிக்கல் இருந்தால், அதைப் பற்றி அவரிடம் பேசுங்கள். உங்களுக்கு தேவையான சிறப்பான காரியங்கள் என்ன என்பதை அவர் அறிந்திருக்கிறபடியால், தேவன் உங்கள் முடிவுகளையும், உங்கள் விருப்பத்தையும் மேற்பார்வையிடும்படி ஜெபியுங்கள்.

காலையில் படுக்கையில் இருந்து எழும்போது, நாள் முழுதும் சிந்திக்க குறைந்தபட்சம் ஒரு வசனத்தையாவது வாசியுங்கள். சில சகோரர்கள் தினமும் காலையில் ஒரு சங்கீதம் வாசிக்க விரும்புவார்கள். தனிப்பட்ட முறையில் நானும் அன்றைய மன்னாவை வாசிக்க விரும்புவேன். பெரியதாக இருந்தாலும், சிறியதாக இருந்தாலும் சரி, நீங்கள் ஒரு முடிவை எடுக்கும்போது, கர்த்தருடைய வழிகாட்டுதலுக்காக ஜெபியுங்கள். நான் எந்த பிராண்ட் பேஸ்ட்டை வாங்குவது என்று நான் கர்த்தரிடம் கேட்கத் தேவையில்லை என்று நீங்கள் சொல்லலாம். இது உண்மையாகவும் இருக்கலாம். ஆனால், ஒருவேளை நீங்கள் கடையில் உள்ள ஒருவருடன் தொடர்பு கொள்ள வேண்டும் என்று கர்த்தர் விரும்பினால், அவருடைய பரிசுத்த ஆவி உங்கள் வார்த்தைகளை வழிநடத்த ஜெபியுங்கள். நீங்கள் பேசுவது..."ஹலோ" அல்லது "காலை வணக்கம்" ஆக கூட இருக்கலாம்.

மேலும் உங்கள் வாழ்க்கையில் எப்போதும் தேவனின் கரங்களை கவனியுங்கள். நீங்கள் எடுக்கும் ஒவ்வொரு சுவாசத்தின் போதும் அவர் உங்களுடன் இருக்கிறார். நீங்கள் எவ்வளவு அதிகமாக ஆவிக்குரிய ரீதியில் முதிர்ச்சியடைகிறீர்களோ, அவ்வளவு அதிகமாக அவருடைய கரம் உங்கள் வாழ்க்கையில் வேலை செய்வதைக் காண்பீர்கள். அந்த தினசரி பிரதிபலிப்பு உங்கள் விசுவாசத்தை வேகமாக அதிகரிக்கும்.

நாளின் முடிவில், நீங்கள் படுக்கையில் இருக்கும் போது, அந்த நாளுக்காகவும், உங்களைப் பாதுகாத்து அவருக்கு அருகில் வைத்திருந்ததற்காகவும் கர்த்தருக்கு நன்றி சொல்லுங்கள். உங்கள் தவறுகளுக்காக மன்னிப்பு கேளுங்கள். அவருக்கு சித்தமானால், உங்களுக்கு மற்றொரு பாதுகாப்பான இரவு ஓய்வு கிடைக்க ஜெபியுங்கள்.

## தவிர்க்க வேண்டியவை

நீதிமொழிகள் 6:16 -19 ல் கர்த்தர் வெறுக்கும் ஏழு விஷயங்களை நாம் அனைவரும் நன்கு அறிந்திருக்கிறோம். "மேட்டிமையான கண், பொய் நாவு, குற்றமற்றவர்களுடைய இரத்தம் சிந்துங் கை, துராலோசனையைப் பிணைக்கும் இருதயம், தீங்கு செய்வதற்கு விரைந்தோடுங் கால், அபத்தம் பேசும் பொய்ச்சாட்சி, சகோதரருக்குள்ளே விரோதத்தை உண்டுபண்ணுதல் ஆகிய இவைகளே."

குறிப்பாக நம்முடைய கிறிஸ்துவ நடையில் மூன்று முக்கியமான காரியங்கள் உள்ளது. (1) மற்றவர்களை நியாயந்தீர்க்காதீர். தேவனே நியாயாதிபதி. அதுமட்டுமல்லாமல், இன்னொருவரின் வாழ்க்கையில் நடக்கும் அனைத்தும் நமக்குத் தெரியாது. (2) சபையில் பிரிவினைகளில் பங்கேற்க வேண்டாம். நீங்கள் பிரிந்து செல்லும் பகுதியில் இருக்க நேர்ந்தால், ஒரு பக்கத்தைத் தேர்ந்தெடுக்கும்படி உங்களை யாரும் கட்டாயப்படுத்தாதபடி பார்த்துகொள்ளுங்கள். (3) சகோதரர்களில் யாரையும் ஆராதிக்காதீர்கள். சகோதரர்களை மதிப்பதும், பாராட்டுவதும் நல்லது, ஆனால் ஒருபோதும் அவர்களை வழிபடக்கூடாது.

நிதானம்

ஏற்றுக்கொள்ளக்கூடிய தற்காலிகமான அனைத்தும் இன்னும் மிதமானதாக இருக்கவேண்டும் என்பதை நினைவில் கொள்வோம். நாம் மடத்தில் வசிப்பதில்லை. மாறாக, தேவனின் அன்பின் சட்டத்திற்கு இசைவாக, அனைவருடனும் அமைதியான வாழ்க்கையை வாழ முயற்சி செய்யுங்கள். நாம் குறுகிய பாதையில் நடக்கும்போது, நாம் கண்காணிக்கப்படுகிறோம் என்பதை நினைவில் கொள்ளுங்கள் - தேவன் மற்றும் இயேசுவால் மட்டுமல்ல, வானதூதர்களுக்கும் மனிதர்களுக்கும் நாம் ஒரு காட்சியாக



இருக்கிறோம். எனவே, எப்போதும் கர்த்தருக்குப் பிரியமான வாழ்க்கை முறையை வாழ்வோம்.

குணநலன்களின் மேம்பாடு

# யூதாவின் குணம் யோசேப்பின் மூலம் வெளிப்படுத்தப்பட்டது



— *Harry Wildblood*

"என்னை இவ்விடத்தில் வரும்படி விற்றுப்போட்டதினால், நீங்கள் சஞ்சலப்படவேண்டாம், அது உங்களுக்கு விசனமாயிருக்கவும் வேண்டாம், ஜீவரட்சணை செய்யும்படிக்குத் தேவன் என்னை உங்களுக்கு முன்னே அனுப்பினார்." (ஆதி*45:5*)

ஆதியாகமத்தில் கடைசி பதினான்கு அதிகாரங்களில் யோசேப்பு ஒரு பிரகாசமான வெளிச்சமாக இருக்கிறார், உண்மையில், மிக எளிதாக, அவரது சகோதரர்களை காட்டிலும் மேலானவராக இருக்கும் அளவுக்கு அவர் மிகவும் பிரகாசமானவராக இருந்தார். ஆதியாகமம் 49ம் அதிகாரத்தில், யாக்கோபின் மரணத்திற்கு சற்று முன்பு அவருடைய பன்னிரண்டு சகோதரர்களுக்கும் தீர்க்கதரிசனங்களை வழங்கினார். ஆனால் யாக்கோபின் குமாரர்களுக்கு இந்த தீர்க்கதரிசனங்கள் உத்தரவாதம் அளித்ததா அல்லது கடவுளுக்கு மட்டுமே தெரிந்த காரணங்களுக்காக அவை வழங்கப்பட்டதா ? என்ற கேள்வி எழும்புகிறது.

லேயாளின் குமாரர்களுக்கு கொடுக்கப்பட்ட முதல் நான்கு தீர்க்கதரிசனங்களைப் பார்ப்போம். யாக்கோபின் முதல் குமாரன் ரூபன், தன் தகப்பனுடைய மறுமனையாட்டியாகிய பில்காளோடே தகாத உறவை வைத்திருந்ததினால், தண்ணீரைப்போல தளம்பினவன் என்றும், நீ மேன்மை அடையமாட்டாய் என்றும் சொல்லப்பட்டது. (ஆதியாகமம் 49:3-4, 35:22) இதனால் ரூபன் முதற்பிறந்த சேஷ்டபுத்திர பாகத்தை இழந்துபோனார். (1நாளாகமம் 5:1)

சிமியோனும் லேவியும் "கொடுமையின் கருவிகள்" என்று அழைக்கப்பட்டனர் (ஆதியாகமம் 49:5-6) அவர்களது சகோதரி தீனாளை ஒருவன் கற்பழித்த பிறகு, அவர்கள் சீகேமின் புருஷர்களை தந்திரமாக ஏமாற்றி, அனைவரையும் கொலை செய்தார்கள். (ஆதியாகமம் 34) கடவுள் "யாக்கோபிலே அவர்கள் பிரியவும், இஸ்ரயேலிலே அவர்களைச் சிதறவும் பண்ணுவேன்." என்று கூறினார்.

சிமியோன் இஸ்ரயேலின் தெற்குப் பகுதியைப் பாதுகாப்பற்ற எல்லையுடன் பெற்றார், மேலும் லேவி இஸ்ரயேல் முழுவதும் லேவிய பட்டணங்களில் சிதறடிக்கப்பட்டார். யாக்கோபின் முதல் பிறந்த மூன்று குமாரர்கள் தங்கள் விழுந்துபோன உணர்வுகளினால், பயங்கரமான பாவங்களை செய்ததினால், அவர்களுக்கு கொடிய தீர்க்கதரிசனங்கள் கொடுக்கப்பட்டது.

ஆனால் அவருடைய நான்காவது மகன் யூதாவின் தீர்க்கதரிசனம் அவருடைய முந்தைய செயல்களைக் குறிப்பிடவில்லை. ஆதியாகமம் 49:8-10 வசனங்களில் துதி, செங்கோல், நியாயப்பிரமாணிகன் மற்றும் ஜனங்கள் கூடுவதைப் பற்றி பேசுகிறது. இவை கிறிஸ்துவைப் பற்றிய அற்புதமான குறிப்புகள். ஆனால் மீண்டும் ஒரு கேள்வி :- இந்த புகழ்பெற்ற எதிர்காலத்திற்காக கடவுள் தன்னிச்சையாக யூதாவை (யூதா என்பதற்கு புகழ்ச்சி என்று பொருள்) தேர்ந்தெடுத்தாரா அல்லது இந்த ஆசீர்வாதங்களைப் பெற யூதா ஏதாவது செய்தாரா ?

### யூதாவைப் பற்றிய சில வரலாறு

யோசேப்பு யாக்கோபின் பதினோராவது குமாரன் மற்றும் யாக்கோபு நேசித்த அன்பான ராகேலின் முதல் குமாரன். ராகேலினால் மட்டும் அல்ல, எல்லாக் கடமைகளிலும் உண்மையாகவும்



பொறுப்புடனும் இருந்ததால் யோசேப்பு அவருக்குப் பிடித்த குமாரனாக இருந்தார்.

யாக்கோபு, யோசேப்புக்கு பல வண்ணங்களுள்ள ஒரு அங்கியை அணிவித்திருந்தார்.இது அவரது சகோதரர்களை பொறாமைக்குள்ளாக்கியது. (ஆதியாகமம் 37:3-4) யோசேப்பு தனது சகோதரர்கள் மற்றும் அவரது பெற்றோருக்கும் மேலாக இருப்பதாக தனது



கனவுகளை பகிர்ந்து கொண்டபோது, அவரது சகோதரர்கள் பொறாமையினால் அவரை வெறுத்தனர். (ஆதியாகமம் 37:7-10)

ஆடுகளை மேய்த்துக்கொண்டிருந்த யோசேப்பின் மூத்த சகோதரர்களிடம் யோசேப்பு அனுப்பட்டபோது, அவர்கள் அவரைக் கொல்லத் திட்டமிட்டனர். (ஆதியாகமம் 37:19-20) யோசேப்பை ஒரு குழியில் உயிருடன் வைத்திருக்கும்படி ரூபன் அவர்களை சமாதானப்படுத்தினார். இஸ்மயேல் வணிகர்கள் அங்கு வந்தபோது, யூதா யோசேப்பை அவர்களுக்கு அடிமையாக விற்க பரிந்துரைத்தார். சகோதரர்களுக்கு இருபது வெள்ளிக் காசுகள் கொடுக்கப்பட்டன. ஒருவேளை அவர்கள் யோசேப்பைக் கொல்லவில்லை என்று தங்களைப் பற்றி உயர்வாக நினைத்திருக்கலாம், மேலும் இந்த ஏற்பாட்டில் தங்களுக்கு லாபம் பெற்றதை எண்ணி அவர்களின் புத்திசாலித்தனத்தை மெச்சி கொண்டிருந்திருக்கலாம். (ஆதியாகமம் 37:26-28)பின்னர் திரும்பி வந்த ரூபன் யோசேப்பை காணவில்லை. ஆனால் அவருடைய சகோதரர்களோடு பொய் சொல்ல இணைந்தார். அவர்கள் யோசேப்பின் இரத்தக் கறை படிந்த அங்கியை யாக்கோபிற்கு கொடுத்தனர். மேலும் 20 வருடங்களுக்கு மேலாக அவரது அன்பு மகனுக்காக மோசமாக கவலைப்படவும், வருத்தப்படவும் அவரை அனுமதித்தனர். ஒரு குமாரனை இழந்த பெற்றோரின் வேதனை எவ்வளவு ஆழமானதும் நீடித்திருப்பதுமாக இருக்கிறது ? பிள்ளைகளை இழந்தவர்களால் மட்டுமே இதைப் புரிந்துகொண்டு உணரமுடியும். யூதாவின் விழுந்துபோன குணம் யோசேப்பின் காரியத்தில் வெளிப்பட்டது. அவருடைய பொறாமை, வெறுப்பு மற்றும் பேராசை ஆகியவற்றை இது வெளிப்படுத்தியது, அனைவரும் ஒருமித்து செயல்பட்டாலும், "நமது கை அவன்மேல் படாதிருப்பதாக, அவன் நம்முடைய சகோதரனும், நம்முடைய மாம்சமுமாய் இருக்கிறானே "என்ற அறிக்கையால் தங்களின் துர்க்குணத்தை மூடிமறைத்தார். (ஆதியாகமம் 37:27)

### எகிப்தில் யோசேப்பு

யோசேப்பு எகிப்தில் ஒருஅடிமையாக, பார்வோனின் தலைமை அதிகாரியான போத்திபாருக்கு விற்கப்பட்டார். அங்கு யோசேப்பு விரைவில் போத்திபார் குடும்பத்தின் தலைமைப் பொறுப்பாளராக ஆனார். போத்திபாரின் மனைவி யோசேப்பை வசியப்படுத்துவதில் தோல்வி அடைந்ததினால்,அவர் தன்னை தகாத உறவுக்கு அழைக்க முயற்சித்தார் என்று யோசேப்பின் மேல் குற்றம் சுமத்தினாள். போத்திபார் தனது மனைவியின் துரோகத்தைப் பற்றி அறிந்திருக்கலாம். எனவே அவர் யோசேப்பைக் கொல்லாமல் சிறையில் அடைத்திருக்கலாம். யோசேப்பு விரைவில் சிறையின் பொறுப்பாளராக ஆனார். (ஆதியாகமம் 39:9-33)

பார்வோனின் தலைமை சுயம்பாகியும், பானபாத்திரக்காரனும் சிறையில் அடைக்கப்பட்டனர். அப்போது யோசேப்பு அவர்களின் கனவுகளை துல்லியமாக விளக்கினார். பானபாத்திரக்காரன் மீண்டும் பணியில் அமர்த்தப்பட்டார், சுயம்பாகியோகொல்லப்பட்டார். (ஆதியாகமம் 40:6-

23)

பின்னர் கடவுள் பார்வோனுக்கு இரண்டு இணையான கனவுகளைக் கொடுத்தார், அது அவரை தூக்கத்திலிருந்து எழுப்பியது. நைல் நதியில் இருந்து ஏழு கொழுத்த பசுக்களைத் தொடர்ந்து ஏழு மெலிந்த பசுக்கள் வந்தன. பின்னர் ஏழு கொழுத்த தானியக் கதிர்களைத் தொடர்ந்து ஏழு மெலிந்த தானியங்கள் வந்தன. ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் மெலிந்தவைகள் கொழுத்ததை விழுங்கியது. பார்வோனின் மந்திரவாதிகள் மற்றும் ஜோதிடர்களால் எந்த விளக்கத்தையும் அளிக்கமுடியவில்லை. ஆனால் யோசேப்பு சொன்ன கனவுகளின் துல்லியமான விளக்கத்தை அப்போது பானபாத்திரக்காரன் நினைவு கூர்ந்தார். எனவே பார்வோன் யோசேப்பை சிறையிலிருந்து வரவழைத்தார். நிறைவான ஏழு வருடங்களை தொடர்ந்து ஏழு வருடங்கள் பஞ்சம் வரும் என்று சொல்லி அனைத்து புகழையும் கடவுளுக்கு கொடுத்தார்.வரப்போகும் பஞ்சத்திற்கு ஆயத்தம் செய்ய ஒரு மனிதனைத் தேர்ந்தெடுக்கும்படி அவர் பரிந்துரைத்தார் - அப்போது பார்வோன் யோசேப்பை எகிப்து முழுவதற்கும் இரண்டாவது தளபதியாகத் தேர்ந்தெடுத்தார். (ஆதியாகமம் 41:15-44)

யோசேப்பின் அனுபவம் இயேசுவைப் பற்றிய அற்புதமான ஒரு நிழலாகும். இயேசு தன்னுடைய சகோதரர்களால் பகைக்கப்பட்டு, இஸ்ரயேலின் மூப்பர்களால் வெறுக்கப்பட்டு, 30வெள்ளிக் காசுகளுக்கு விற்கப்பட்டு, சிலுவையில் அறையப்பட்டு மரணச் சிறைச்சாலையில் தள்ளப்பட்டார். அதற்கு பின் கடவுளின் வலது பாரிசத்தில் உயர்த்தப்பட்டதைக் காட்டும் அற்புதமான சித்திரமாகும். அந்த மத்தியஸ்த இராஜ்யத்தில் பூமியின் அனைத்து குடும்பங்களையும் ஜீவ அப்பத்தால் ஆசீர்வதிப்பார்.

அப்போது யோசேப்பு மகிமையில் உள்ள இயேசுவையும்,அவருடைய எகிப்திய மனைவி, இந்த உலகத்தில் இருந்து அழைக்கப்பட்ட அவருடைய மணவாட்டியை அடையாளப்படுத்துகிறார். கிறிஸ்துவும் சபையும் மனுக்குலத்திற்கு ஜீவனை கொடுக்க அதிகாரமும் திறனும் பெற்றிருப்பார்கள்.

யோசேப்பின் பத்து சகோதரர்கள் மேல் கவனம் செலுத்துதல்

இப்போது இந்த சரித்திரத்தில் 10 சகோதரர்களின் மேல் கவனம் செலுத்தப்படுகிறது. அவர்கள் 20 ஆண்டுகளுக்கு முன்பு யோசேப்பை அடிமையாக விற்ற அதே மனிதர்களாக இருந்தார்களா? யோசேப்பு கண்டுபிடித்து வடுவார். இறுதியாக, அவருடைய சகோதரர்கள் உணவுக்காக அவரிடம் வருவார்கள் என்பதை யோசேப்பு நன்கு அறிந்திருந்தார்.யாக்கோபு தன் குமாரர்களை உணவு வாங்க எகிப்துக்கு அனுப்பும் போது, அவர் தன் இளைய குமாரனாகிய பென்யமீனை இழக்காதபடிக்கு அவரை தன்னிடம் வைத்துகொண்டார். (ஆதியாகமம் 42:1-4)

எகிப்துக்கு வந்தடைந்த சகோதரர்கள் யோசேப்பை வணங்கி, அவர்களுக்குத் தெரியாத ஒரு மொழிபெயர்ப்பாளர் மூலம் பேசினார்கள். யோசேப்பு உடனடியாக அவர்களை உளவாளிகள் என்று குற்றம் சாட்டினார். சகோதரர்கள் தங்களைத் தற்காத்துக் கொண்டு கானானில் உள்ள தங்கள் தந்தை மற்றும் இளைய சகோதரனைப் பற்றியும், "இல்லாத" மற்றொரு சகோதரனைப் பற்றியும் யோசேப்பிடம் சொன்னார்கள்.(ஆதியாகமம் 42:5-13)

தன் சகோதரர்களை மூன்று நாட்கள் சிறையில் அடைத்த பிறகு, அவர்கள் தங்களுடைய இளைய சகோதரனைக் கூட்டிக்கொண்டு வராவிட்டால் இனி தானியங்களை வாங்க முடியாது என்று யோசேப்பு சொன்னார். அவர்கள் பெஞ்சமினுடன் திரும்பி வரும் வரை சிமியோன் சிறையில் அடைக்கப்பட்டார்.

பல தசாப்தங்களுக்கு முன் அவர்கள் செய்த குற்றங்களே இப்போது அவர்கள் அனுபவிக்கும் சோதனைகள் என்பதை அவர்கள் நன்கு உணர்ந்து, ஒப்புக்கொண்டார்கள் என்பதை இரகசியமாகக் கேட்டறிந்த யோசேப்பு கண்ணீர் விட்டார்.அந்த ஒன்பது சகோதரர்களும் உணவு மற்றும் தங்கள்

சாக்குகளில் அவர்கள் கொண்டுவந்த பணமும் மறைத்து வைக்கப்பட்டு வீட்டிற்கு அனுப்பப்பட்டனர். (ஆதியாகமம் 42:14-28)இந்த கட்டத்தில் அவர்கள் பல ஆண்டுகளுக்கு முன்பு யோசேப்பைப் போலவே சிமியோனை சிறையில் கைவிட்டிருக்கலாம். ஆனால் பஞ்சம் தொடரும் என்றும் சகோதரர்கள் பெஞ்சமினுடன் திரும்ப வேண்டும் என்றும் யோசேப்பு அறிந்திருந்தார்.

பெஞ்சமீனை அழைத்து வருவதற்கு ஆளுநரின் கோரிக்கைக்கு யாக்கோபு மறுப்பு தெரிவித்தார். "என்னைப் பிள்ளையற்றவனாக் குகிறீர்கள், யோசேப்பும் இல்லை, சிமியோனும் இல்லை, பென்யமீனையும் கொண்டுபோகப் பார்க்கிறீர்கள், இதெல்லாம் எனக்கு விரோதமாய் நேரிடுகிறது என்றார்."(ஆதியாகமம் 42:36) பெஞ்சமின் பாதுகாப்பாக திரும்பவில்லை என்றால் ரூபன் தனது இரண்டு குமாரர்களைக் கொல்ல முன் வந்தார். ஆனால் யாக்கோபு அத்தகைய திட்டத்தை நிராகரித்தார். (ஆதியாகமம் 42:37-38)

இந்த சூழ்நிலை எவ்வாறு சீரமைக்கப்படும்? இந்த முட்டுக்கட்டையை யார் உடைப்பார்? கடவுள் தாமே! எப்படி என்பதை பார்ப்போம்.

## யூதாவின் அனுபங்கள்

சுமார் 23 ஆண்டுகளுக்கு முன்பு, யோசேப்பை விற்ற



உடனேயே, யூதா ஒரு கானானிய பெண்ணை மணந்தார், அவர் அவருக்கு மூன்று குமாரர்களை பெற்றாள். ஏர், ஓனான் மற்றும் ஷேலா. இவர்களை யூதா நேசித்தார். ஏர் வளர்ந்தபோது, யூதா கானானிய பெண்ணாகிய தாமாரை அவனுக்கு மனைவியாக கொடுத்தார். ஆனால் ஏர் "கர்த்தரின் பார்வையில் பொல்லாதவராக இருந்தபடியால் கர்த்தர் அவனைக் கொன்றார்."ஏருக்கு பிள்ளைகள் உண்டாகும்படிக்கு தாமார் ஓனானுக்கு கொடுக்கப்பட்டாள். (உபாகமம் 25:5-6) ஆனால் ஓனான் இதை மறுத்ததினால் தேவன் ஓனானையும் கொன்றுபோட்டார். ஷேலா திருமணம் செய்து கொள்ள முடியாத அளவுக்கு இளையவனாக இருந்ததால், ஷேலா வளரும் வரை தாமாரை தன் தந்தையின் வீட்டில் தங்கும்படி யூதா சொன்னார். (ஆதியாகமம் 38:7-11)

ஆனால் யூதா இந்த குமாரனையும் இழக்க மனதில்லாதவராக தாமாரோடு செய்த ஒப்பந்தத்தை முறித்தார். எனவே தாமார் இந்த விஷயங்களை தன் கைகளில் எடுத்துக் கொண்டாள். யூதாவின் மனைவி இறந்த பிறகு, அவர் தனது ஆடுகளுக்கு மயிர் கத்திரிப்பதற்கு திம்னாவுக்குச் சென்றார், அங்கு தாமார் ஒரு வேசியாக மாறுவேடமிட்டு யூதாவை கவர்ந்தாள். யூதா அவளை ஒரு ஆட்டின் விலைக்கு முன்மொழிந்தான். அவள் ஒப்புக்கொண்டாள், ஆனால் ஆடு வரும் வரை யூதா தனது முத்திரை மோதிரத்தையும், ஆரமும் மற்றும் கை தடியும் அடகு வைக்க வேண்டும் என்று வலியுறுத்தினாள். தாமார் கருவுற்று, தன் விதவையின் ஆடைகளை அணிந்துகொண்டு, தன் தந்தையின் வீட்டிற்குத் திரும்பினாள். (ஆதியாகமம் 38:12-19)

பின்னர், தாமார் கர்ப்பமாக இருப்பதை அறிந்த யூதா, அவள் செய்த விபச்சாரத்திற்காக அவளை எரிக்க வேண்டும் என்றும் விரும்பினார். விசாரிக்கப்பட்ட போது, தாமார் யூதா கொடுத்த முத்திரை மோதிரம், கைத்தடியையும், ஆரத்தையும் ஒப்படைத்தாள். யூதாவை தன் பிள்ளைகளுக்கு தந்தை என்று காட்டினாள். தாமார் பின்னர் சேரா மற்றும் பாரேஸ் ஆகிய இரட்டை பிள்ளைகளை யூதாவுக்கு பெற்றெடுத்தாள்.(ஆதியாகமம் 38:24-30)

அந்த 23 ஆண்டுகளில், யூதா தன்னால் நேசிக்கப்பட்ட குமாரர்கள் இருவரையும் இழந்து தனிப்பட்ட வேதனையை அனுபவித்தார். இப்போது

யூதாவுக்கு யாக்கோபின் வலி புரிந்திருக்கும். தாமாருக்கு சேலாவை கணவனாகக் கொடுக்காமல் அவளுக்கு செய்து கொடுத்த சத்தியத்தை மீறும்அளவுக்கு அவர் வேதனையில் இருந்தார். ஆனால் கடவுள் அவருக்கு இரக்கம் காட்டி, தாமாரின் இரண்டு கூடுதலான குமாரர்களின் மகிழ்ச்சியை அவருக்கு கொடுத்தார்.

## யாக்கோபு மற்றும் அவளுடைய குமாரர்களிடம் திரும்புதல் மேலும் பஞ்சம்

பஞ்சம் மோசமடைந்து அவர்களின் உணவும் தீர்ந்து போனதால், யாக்கோபு கடைசியாக பெஞ்சமீனை தனது சகோதரர்களுடன் எகிப்துக்கு அனுப்ப ஒப்புக்கொண்டார்.ஆனால் யூதா யாக்கோபை இனி எந்த இழப்பையும் சந்திக்க அனுமதிக்கவில்லை, அதனால் அவர், பெஞ்சமீனை மீண்டும் கொண்டு வருவதற்கான உத்தரவாதம் அளிப்பதாக யாக்கோபிடம் கூறினார்.(ஆதியாகமம் 43:8-9)

எகிப்துக்குத் திரும்பியதும், சகோதரர்கள் ஆளுநரின் (யோசேப்பு) முன் வணங்கினார்கள், சிமியோன் விடுவிக்கப்பட்டார், அவர்கள் அனைவரும் ஒன்றாக உணவருந்தினர், யோசேப்பு இப்போது இறுதி சோதனையை தீர்மானித்தார். அனைவரின் பணத்தை அவர் அவர் சாக்கில் போடுவதற்கும் அவருடைய வெள்ளி கோப்பையை பெஞ்சமீனுடைய சாக்கில் போடுவதற்கு இரகசியமாக ஏற்பாடு செய்தார். அவர்கள் சென்ற பிறகு, அவர்கள் யோசேப்பின் வெள்ளி கோப்பையை திருடியதாகக் குற்றம் சாட்டப்பட்டனர். தாங்கள் நிரபராதி என்பதை சகோதரர்கள் அறிந்திருந்தனர். மேலும் கோப்பை கண்டுபிடிக்கப்பட்டால் அனைவரும் பொறுப்பேற்க வேண்டும் என்பதையும் அறிந்திருந்தனர். ஆனால் வெள்ளிக் கோப்பையுடன் கண்டுபிடிக்கப்படும் சகோதரன் மட்டுமே பிடிக்கப்படுவார் என்றும் மற்றவர்கள் விடுதலையாகலாம் என்றும் பணியாளர் கூறினார். வெள்ளி கோப்பை பெஞ்சமீனின் சாக்கில் கண்டுபிடிக்கப்பட்ட போது, அவர்கள் அனைவரும் எகிப்துக்குத் திரும்பினர். (ஆதியாகமம் 44:1-13)



கோப்பைக்கான குற்றத்தை ஒரு சகோதரர் மட்டுமே சுமப்பார் என்று யோசேப்பு கூறினார். பெஞ்சமீன் திரும்பி வருவதற்கான உத்தரவாதத்தையும், அவர் திரும்ப வில்லை என்றால் அதனால் ஏற்படும் பேரழிவையும் யூதா விவரித்தார். அதற்குபின் யோசேப்பின் வார்த்தையின்படியே, "இளையவன் தன் சகோதரரோடேகூடப் போகவிடும்படி மன்றாடுகிறேன், உம்முடைய அடியானாகிய நான் இளையவனுக்குப் பதிலாக இங்கே என் ஆண்டவனுக்கு அடிமையாயிருக்கிறேன்" என்று வலியுறுத்தினார். (ஆதியாகமம் 44:33)

### யூதாவின் மாறிய குணம்

யோசேப்பு ஏற்பாடு செய்த இந்த இறுதி சோதனையின் மூலம் மாறிய யூதாவின் குணம் முழுமையாக இப்போது வெளிப்பட்டது, யோசேப்பு மகிழ்ச்சியில் மூழ்கினார். யூதா பென்யமீனுக்காக தன்னை கொடுக்க முன்வந்தது போல -"ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு, ஒருவரிடத்திலுமில்லை." (யோவான் 15:13)

யோசேப்பு அனைத்து எகிப்தியர்களையும் வெளியே அனுப்பினார். இறுதியாக தனது சகோதரர்களுக்கு தனது உண்மையான அடையாளத்தை வெளிப்படுத்தினார். அவர்கள் பயப்படவேண்டாம் என்றும், ஜீவனைக் காக்க கடவுள் அவரை எகிப்துக்கு அனுப்பினார் என்றும் அவர் அவர்களுக்கு உறுதியளித்தார்.

சகோதரர்கள் பின்னர் யாக்கோபு மற்றும் அவர்களது குடும்பங்களை எகிப்துக்குக்

கொண்டுவருவதற்காக கானானுக்குத் திரும்பினார்கள், மேலும் யூதா குடும்பத்தை மீண்டும் யோசேப்பிடம் வழிநடத்தினார். யூதா தனது சொந்த மகன்களான சேலா, சேரா மற்றும் பாரேஸ் ஆகியோரை எகிப்துக்கு அழைத்து வந்து, தங்களுடைய ஜீவனை காப்பாற்றிய ஒரே உண்மையான கடவுளை வழிபடுவதற்கு அவர்களை வளர்த்திருக்கலாம். (ஆதியாகமம் 45:1-5)

பதினேழு ஆண்டுகளுக்குப் பிறகு, யாக்கோபு யூதாவை ஆசீர்வதித்தார். "யூதாவே, சகோதரரால் புகழப்படுபவன் நீயே,....சமாதான கர்த்தர் வருமளவும் செங்கோல் யூதாவைவிட்டு நீங்குவதும் இல்லை, நியாயப்பிரமாணிக்கன் அவன் பாதங்களை விட்டு ஒழிவதும் இல்லை...." (ஆதியாகமம் 49:8,10)

இயேசுவின் வம்சாவழி யாக்கோபின் வழியாக யூதாவிலிருந்து பாரேஸ் வழியாக சென்றது. பெஞ்சமீனை மீட்பதற்காக தனது ஜீவனை அளிக்கும் அளவிற்கு, யூதா தனது கடினமான அனுபவங்களை தன் சுயநலத்திலிருந்து இரக்கத்திற்கு மாற்றியதால் இந்த மகத்தான மரியாதை கிடைத்தது.

## நமக்கான பாடங்கள்

இவை புது சிருஷ்டிக்கு முக்கியமான பாடங்கள். நாம் ஒளியில் உள்ள பரிசுத்தவான்களில் பங்கடையும்படிக்கும், நம்மை திருத்துவதற்கும், நம்மை மாற்றுவதற்கும், நமக்கு கடினமான அனுபவங்கள் உள்ளது.(கொலோசேயர் 1:12) "நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் " என்று 1கொரிந்தியர் 10:16ல் வாசிக்கிறோம். நம்மை வடிவமைக்கவும், சீர்ப்படுத்தவும், மகிமையில் கிறிஸ்துவின் மணவாட்டியாக நம்மை ஆயத்தப்படுத்தவும் பயன்படுத்தப்படும் கடினமான அனுபவங்களுக்காக நாம் அனைவரும் கடவுளுக்கு நன்றி சொல்ல வேண்டும். இந்த கடிந்துக்கொள்ளுதல் அல்லது அனுபவங்கள் அனைத்தும், கடவுள் நம்மீது வைத்திருக்கும் அன்பைக் காட்டுகிறது, ஏனெனில் அவர் நம்முடைய அழுக்குகளை அகற்றி, நம் குணாதிசயங்களைத் தூய்மைப்படுத்துகிறார். "ஆனாலும் நான் போகும் வழியை அவர் அறிவார், அவர் என்னைச் சோதித்தபின் நான் பொன்னாக விளங்குவேன்." (யோபு 23:10)

## சேர்க்கை

யூதா யோசேப்பை இஸ்மயேலர்களுக்கு விற்றது, யோசேப்பை அவரது சகோதரர்களின் கைகளில் மரணத்திலிருந்து "காப்பாற்றும்" நோக்கமாக இருந்தது என்று சில விமர்சகர்கள் தெரிவிக்கின்றன. ஆனால் இதை வேதம் ஆதரிப்பதில்லை. யோசேப்பின் இரத்தக் கறை படிந்த அங்கியைப் பற்றி யாக்கோபுக்கு எந்த விளக்கமும் கொடுக்கப்படவில்லை, யோசேப்பை இழந்து தவித்த யாக்கோபின் துயரத்திற்கு இரக்கமோ அல்லது கருணையோ காட்டப்படவில்லை. பல தசாப்தங்களாக தனிப்பட்ட அனுபவங்கள் மூலம் கடவுள் யூதாவின் இருதயத்தை மாற்றினார். (ஆதியாகமம் 38:6-14) 38ம் அதிகாரத்தில், யூதா தனது குமாரர்களில் ஒன்றல்ல, இருவரை இழந்ததால் ஏற்பட்ட மனவேதனையைப் பற்றி பார்க்கும் போது, இதனால் அவர் தாமாருக்கு கொடுத்த வார்த்தையை மீறினார். எகிப்தில் ஆளுநரை எதிர்கொண்டபோது, யோசேப்பை விற்றதில் உள்ள தங்கள் குற்றத்தை சகோதரர்கள் ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டனர். (ஆதியாகமம் 42:21- 22) அவர்கள் யோசேப்பின் மரணத்தைப் பற்றி பேசினார்கள். (ஆதியாகமம் 42:32) அவர்களின் இறுதி சந்திப்பில், யூதா யோசேப்புக்கு செய்த துரோகத்திற்கு அவர் மரணத்திலும் உள்ள தங்களுடைய அக்கிரமத்தை வெளிப்படையாகப் பேசினார். (ஆதியாகமம் 44:16, 20) பின்னர் யூதா பெஞ்சமீனுக்கு ஈடாகத் தன்னைக் கொடுப்பதன் மூலம், பழிவாங்கும் எண்ணத்தில் இருந்து அன்பு செலுத்தும் எண்ணமாக தன் குணத்தை மாற்றிக் காட்டினார். (ஆதியாகமம் 44:33-34)

யோசேப்பைக் காப்பாற்றவே அவரை விற்றதாக சொல்லப்படும் எண்ணம் எதுவும் இல்லை. யாக்கோபு இறந்த பிறகு யோசேப்பு இதை நன்றாக தெளிவுபடுத்துகிறார். (ஆதியாகமம் 50:20)

## இயேசு பலி செலுத்தின நேரம்

# கிறிஸ்துவை பிரசங்கித்தல்



*Bill Dutka*

"ஆதலால் விசுவாசம் கேள்வியினாலேவரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே

இயேசு சிலுவையில் பலியிடப்பட்ட நேரம் மற்றும் இந்தப் பலியின் புண்ணியம் யூத விசுவாசிகளுக்கும், பிற்பாடு புறஜாதி விசுவாசிகளுக்கும் வந்து சேர்ந்த நேரமும் அர்த்தமுள்ளதாகத் தோன்றுகிறது. அப்போஸ்தலர் 2:1-16 இல் பதிவு செய்யப் பட்டுள்ளபடி, பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவி யூத சீஷர்களிடம் வந்தது. சீஷர்கள்,"பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத்தொடங்கினார்கள்." பார்வையாளர்களாகிய - பார்த்தரும், மேதரும், எலாமீத்தரும், மெசொப்பொத்தாமியா, யூதேயா, கப்பத்தோக்கியா, பம்பிலியா, எகிப்து, ரோமாபுரியாரும்,... கிரேக்கரும், அரபியருமாகிய....எல்லாரும், சீஷர்கள் தங்கள் தாய்மொழிகளில் சுவிசேஷத்தைப் பேசுவதைக் கேட்டார்கள். "எல்லாரும் பிரமித்துச் சந்தேகப்பட்டு... மற்றவர்களோ - இவர்கள் மதுபானத்தினால் நிறைந்திருக்கிறார்களென்று பரியாசம்பண்ணினார்கள்." இதற்கு "நீங்கள் நினைக்கிறபடி இவர்கள் வெறிகொண்டவர்களல்ல, பொழுது விடிந்து மூன்றாம் மணி (காலை 9 மனி)வேளையாயிருக்கிறதே" என்று பேதுரு பதில் அளித்தார். (அப்போஸ்தலர் 2:15) இந்த பதிலில் இந்த நிகழ்வு பெந்தெகொஸ்தே நாளில் நடந்தது என்று நமக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. பின்னர் அப்போஸ்தலர் 10:1-8 இல் புறஜாதியாகிய நூற்றுக்கு அதிபதியாகிய கொர்நேலியுவுக்கு கிடைத்த பரிசுத்த ஆவியின் ஆசீர்வாதத்தை பற்றி சொல்லப்படுகிறது. "பகலில் ஏறக்குறைய ஒன்பதாம் மணி நேரத்திலே தேவனுடைய தூதன் தன்னிடத்தில் வரவும்...தரிசனங் கண்டு. "(அப்போஸ்தலர் 10:3) "இப்பொழுது நீ யோப்பா பட்டணத்துக்கு மனுஷரை அனுப்பி, பேதுரு என்று மறுபேர்கொண்ட சீமோனை அழைப்பி" என்று 5ம் வசனம் கூறுகிறது.

இந்த இரண்டு நேரங்களும் - காலை 9 மணி மற்றும் மாலை 3மணி - இயேசு சிலுவையில் அறையப்பட்டு நேரத்தையும், அவர் மரித்த நேரத்தையும் நமக்கு நினைப்பூட்டுகிறது. மாற்கு நற்செய்தியில் ,இரண்டு நேரங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளது - காலை 9 மணி மற்றும் மாலை 3 மணி - அதே நேரத்தில் மத்தேயு இயேசுவின் மரண நேரத்தை மட்டுமே பதிவு செய்திருக்கிறார்.(மாற்கு15:25,34,37, மத்தேயு 27:46, 50) மாற்கு சுவிசேஷம் மத்தேயுவை விடச் சிறியது. இருப்பினும், அதே நிகழ்வைப் பற்றி விவாதிக்கும் போது, மத்தேயு தவிர்க்கும் சில விவரங்களை மாற்கு சேர்க்க முனைகிறார். இயேசு சிலுவையில் அறையப்படுதல் மற்றும் மரணம் பற்றிய பதிவுகள் பின்வருமாறு-

### இயேசுவின் சிலுவை மரணம்



மாற்கு 15 - (21) சிரேனே ஊரானும், அலெக்சந்தருக்கும் ரூப்புக்கும் தகப்பனுமாகிய சீமோன் என்னப்பட்ட ஒருவன் நாட்டிலிருந்து அவ்வழியே வருகையில், அவருடைய சிலுவையைச் சுமக்கும்படி அவனைப் பல வந்தம்பண்ணினார்கள். (22) கபாலஸ்தலம் என்று அர்த்தங்கொள்ளும் கொல்கொதா என்னும் இடத்துக்கு அவரைக் கொண்டுபோய், (23)வெள்ளைப்போளம் கலந்த திராட்சரசத்தை , அவருக்குக் குடிக்கக் கொடுத்தார்கள், அவர் அதை ஏற்றுக்கொள்ள வில்லை. (24) அப்பொழுது அவரைச் சிலுவையில் அறைந்தார்கள். அதன்பின்பு அவருடைய வஸ்திரங்களைப் பங்கிட்டு, ஒவ்வொருவன் ஒவ்வொரு பங்கை எடுத்துக் கொள்ளும்படி அவைகளைக் குறித்துச் சீட்டுப்போட்டார்கள். (25) அவரைச் சிலுவையில்

அறைந்தபோது மூன்றாம் மணி(காலை 9 மணி)வேளையாயிருந்தது. (26) அவர் அடைந்த ஆக்கினையின் முகாந்தரத்தைக் காண்பிக்கும்பொருட்டு, யூதருடைய இராஜா என்று எழுதி, சிலுவையின்மேல் கட்டினார்கள். (27) அல்லாமலும், அவருடைய வலது பக்கத்தில் ஒருவனும் அவருடைய இடது பக்கத்தில் ஒருவனுமாக, இரண்டு கள்ளரை அவரோடேகூடச் சிலுவைகளில் அறைந்தார்கள். (28) அக்கிரமக்காரரில் ஒருவனாக எண்ணப்பட்டார் என்கிற வேதவாக்கியம் அதினாலே நிறைவேறிற்று. (29) அந்த வழியாய் நடந்துபோகிறவர்கள் தங்கள் தலைகளைத் துலுக்கி ஆ! ஆ! தேவாலயத்தை இடித்து, மூன்று நாளைக்குள்ளே கட்டுகிறவனே. (30) உன்னை நீயே இரட்சித்துக்கொள், சிலுவையிலிருந்திறங்கிவா என்று அவரைத் தூஷித்தார்கள்.(31) அப்படியே பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் தங்களுக்குள்ளே பரியாசம் பண்ணி - மற்றவர்களை இரட்சித்தான், தன்னைத்தான் இரட்சித்துக்கொள்ள திராணியில்லை. (32)நாம் கண்டு விசுவாசிக்கத்தக்கதாக இஸ்ரயேலுக்கு இராஜாவாகிய கிறிஸ்து இப்பொழுது சிலுவையிலிருந்திறங்கட்டும் என்று சொல்லிக்கொண்டார்கள். அவரோடேகூடச் சிலுவைகளில் அறையப்பட்டவர்களும் அவரை நிந்தித்தார்கள்.

## இயேசுவின் மரணம்



மாற்கு 15:33-39 "ஆறாம் மணி நேரமுதல் ஒன்பதாம் மணி (மாலை 3 மணி)நேரம் வரைக்கும் பூமியெங்கும் அந்தகாரம் உண்டாயிற்று. (34) ஒன்பதாம் மணி நேரத்திலே, இயேசு - எலோயீ !எலோயீ !லாமா சபக்தானி, என்று மிகுந்த சத்தமிட்டுக் கூப்பிட்டார். அதற்கு என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர் என்று அர்த்தமாம். (35) அங்கே நின்றவர்களில் சிலர் அதைக் கேட்டபொழுது - இதோ, எலியாவைக் கூப்பிடுகிறான் என்றார்கள். (36) ஒருவன் ஓடி கடற்காளானைக் காடியிலே தோய்த்து, அதை ஒரு கோலில் மாட்டி, அவருக்குக் குடிக்கக்கொடுத்து, பொறுங்கள், எலியா இவனை இறக்க வருவானோ பார்ப்போம் என்றான். (37) இயேசு மகா சத்தமாய்க் கூப்பிட்டு ஜீவனை விட்டார்.(38) அப்பொழுது தேவாலயத்தின் திரைச்சீலை மேல்தொடங்கிக் கீழ்வரைக்கும் இரண்டாகக் கிழிந்தது. (39) அவருக்கு எதிரே நின்ற நூற்றுக்கு அதிபதி அவர் இப்படிக் கூப்பிட்டு ஜீவனை விட்டதைக் கண்டபோது - மெய்யாகவே இந்த மனுஷன் தேவனுடைய குமாரன் என்றான்"

மத்தேயு 27:46-50. "ஒன்பதாம் மணி (மாலை 3 மணி)நேரத்தில் இயேசு ஏலி !ஏலி!லாமா சபக்தானி, என்று மிகுந்த சத்தமிட்டுக் கூப்பிட்டார், அதற்கு என் தேவனே!என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர் என்று அர்த்தமாம். (47) அங்கே நின்றவர்களில் சிலர் அதைக் கேட்டபொழுது, இவன் எலியாவைக் கூப்பிடுகிறான் என்றார்கள். (48) உடனே அவர்களில் ஒருவன் ஓடி, கடற்காளானை எடுத்து, காடியில் தோய்ந்து, அதை ஒரு கோலில் மாட்டி, அவருக்குக் குடிக்கக்கொடுத்தான்.(49) மற்றவர்களோ - பொறு, எலியா இவனை இரட்சிக்க வருவானோ, பார்ப்போம் என்றார்கள். (50) இயேசு, மறுபடியும் மகா சத்தமாய்க் கூப்பிட்டு, ஆவியை விட்டார்."

## அனைவரக்கும் ஒரே முறை

ஆதாமின் பாவத்திற்கு ஈடுசெய்யும் இயேசுவின் தியாக மரணம், ஒரு முறைதான் கொடுக்கப்பட்டது. இவ்வாறு, மனிதனாகிய இயேசு மரித்ததால், மனிதனாகிய ஆதாம் மற்றும் அவருடைய எல்லா சந்ததியும் வாழ்வதற்கான வாய்ப்பைப் பெற்றுள்ளனர். தேவன் (4) எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார். (5) தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே.(6) எல்லாரையும் மீட்கும்பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே, இதற்குரிய சாட்சி ஏற்ற காலங்களில் விளங்கிவருகிறது. (1தீமோத்தேயு 2:4-6)

ஆதாம் மற்றும் இயேசு இருவரும் பரிபூரண மனிதர்களாக இருந்தினால், நீதியில் பார்வையில் இருவரும் சமமான மதிப்புள்ளவர்களாக இருந்தார்கள். ஆதாமினால் கண்டனம் வந்தது, இயேசுவால் கண்டனத்திலிருந்து விடுதலை கிடைத்தது. "மனுஷனால் மரணம் உண்டானபடியால்,

மனுஷனால் மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று. (22) ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறது போல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்." (1கொரிந்தியர் 15:21-22)

காலை 9 மணிக்கு இயேசு சிலுவையில் அறையப்படுவதும், மாலை 3 மணிக்கு இயேசுவின் மரணமும், ஒரே பலியின் இரு பகுதிகளாகும். இயேசு யூத ஜனங்களுக்காக காலை 9 மணிக்கு சிலுவையில் அறையப்பட்டார். இஸ்ரயேலர்களை நியாயப்பிரமாணத்தின் சாபத்திலிருந்து மீட்பதற்காக இயேசு சிலுவையில் அறையப்பட்டார் - ஆதாமின் மீது சுமத்தப்பட்ட சாபத்திலிருந்து அனைத்து மனுக்குத்தையும் மீட்பதற்காக இயேசு இறந்தார். எனவே, காலை 9 மணிக்கு சிலுவையில் அறையப்படுவது யூத விசுவாசிகளுக்கு பெந்தொஸ்தே ஆசீர்வாதம் வருவதற்கு பொருத்தமான நேரமாகும். பிற்பகல் 3 மணிக்கு இறந்தது, கொர்நேலியுவிலிருந்து தொடங்கி புறஜாதி விசுவாசிகளுக்கு வருவதற்கான ஆசீர்வாதத்திற்கான பொருத்தமான நேரமாகும்.

பவுல் கலாத்தியர் 3:10-14.இல் முதல் பகுதியான மீட்பைப் பற்றி நியாயப் பிரமாணத்தில் இருந்து பேசுகிறார். "(10)நியாயப்பிரமாணத்தின் கிரியைக்காரராகிய யாவரும் சாபத்திற்குட்பட்டிருக்கிறார்கள், நியாயப்பிரமாண புஸ்தகத்தில் எழுதப்பட்டவைகளை யெல்லாம் செய்யத்தக்கதாக அவைகளில் நிலைத்திராதவன் எவனோ அவன் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறதே. (11) நியாயப்பிரமாணத்தினாலே ஒருவனும் தேவனிடத்தில் நீதிமானாகிறதில்லையென்பது வெளியரங்கமாயிருக்கிறது. ஏனெனில், விசாவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே. (12) நியாயப்பிரமாணமோ விசுவாசத்திற்குரியதல்ல, அவைகளைச் செய்கிற மனுஷனே அவைகளால் பிழைப்பான். (13) மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக் கொண்டார்.(14)ஆபிரகாமுக்கு உண்டான ஆசீர்வாதம் கிறிஸ்து இயேசுவினால் புறஜாதிகளுக்கு வரும்படியாகவும், ஆவியைக் குறித்துச் சொல்லப்பட்ட வாக்குத்தத்தத்தை நாம் விசுவாசத்தினாலே பெறும்படியாகவும் இப்படியாயிற்று."

யுகங்களின் விளக்கப்படத்தில், யூத யுகத்தின் முடிவில்,இயேசு சிலுவையில் அறையப்பட்டது, இஸ்ரயேலின் நியாயப்பிரமாணத்தின் சாபத்தை நீக்குவதற்காக என்று காட்ட " P " நிலையில் ஒரு சிலுவை உள்ளது - மேலும் மற்றொரு சிலுவை " N " நிலையில், இயேசுவின் மரணம் ஆதாமின் மரண தண்டனையிலிருந்து அனைவருக்கும் விடுதலையை அளித்தது என்பதைக் காட்டுகிறது.

## மரத்தில் தூக்கப்பட்டார்

நியாயப்பிரமாணத்திற்கு கீழ்ப்படியாமைக்கான சாபம் உபாகமம் 21:22-23இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது."(22)கொலைசெய்யப்பட்ட ஒருவன்மேல் சாவுக்குப் பாத்திரமான பாவம் உண்டாயிருக்க, அவனைக் கொலை செய்யும்படி மரத்திலே தூக்கிப்போடுவாயானால், (23)இரவிலே அவன் பிரேதம் மரத்திலே தொங்கலாகாது, அந்நாளில் தானே அதை அடக்கம்பண்ணவேண்டும், தூக்கிப்போடப்பட்டவன் தேவனால் சபிக்கப்பட்டவன், ஆகையால் உன் தேவனாகிய கர்த்தர் உனக்குச் சுதந்தரமாகக் கொடுக்கும் உன் தேசத்தைக் தீட்டுப்படுத்தாயாக"

ஆபிரகாம் ஈசாக்கை பலியாக ஒப்புக்கொடுத்ததும் நம் நினைவுக்கு வருகிறது.அவர் " ஒரு பலிபீடத்தை உண்டாக்கி, கட்டைகளை அடுக்கி, தன் குமாரனாகிய ஈசாக்கைக் கட்டி, அந்தப் பலிபீடத்தில் அடுக்கிய கட்டைகளின்மேல் அவனைக் கிடத்தினார்." (ஆதியாகமம் 22:9)

ஆதியாகமம் 40:19இல்,யோசேப்பு, சுயம்பாகி பின்னர் பானப்பாத்திரகாரனின் கனவுகளை விளக்கினார். சுயம்பாகியின் கனவை பொருத்தவரையில், "இன்னும் மூன்று நாளைக்குள்ளே பார்வோன் உன் தலையை உயர்த்தி, உன்னை மரத்திலே தூக்கிப்போடுவார், அப்பொழுது பறவைகள் உன் மாம்சத்தைத் தின்னும்." என்று சொன்னார். இந்த கனவு இயேசுவைப் பற்றிய தீர்க்கதரிசனமாகும். அவருடைய மாம்சம் அதாவது அவர் மனிதனாக வாழ்ந்த வாழ்க்கை சிலுவையில் பலியாக கொடுக்கப்பட்டது. மரத்தில் தூக்கிப் போடுவதே, இறுதித் தீர்ப்பாகப் பயன்படுத்தப்பட்ட மற்றொரு உதாரணம் யோசுவா 10:22-27. ஐந்து கானானிய இராஜாக்கள் மக்கேதாவில் தோற்கடிக்கப்பட்டனர், எருசலேம், ஹெப்ரோன், ஜர்மூத், வாக்கிஸ், எக்லோன் ஆகிய இராஜாக்கள் அடிக்கப்பட்டு, கொல்லப்பட்டு, மாலை வரை ஐந்து மரங்களில் தொங்கவிடப்பட்டனர். யூத விசுவாசியான அப்போஸ்தலனாகிய பேதுரு, "நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர்தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார்.." என்று குறிப்பிட்டார். (1பேதுரு 2:24)

## தினசரி பலி, இரண்டு ஆட்டுக்குட்டி

எண்ணாகமம் 28:3-4இல் இஸ்ரயேலில் தினமும், காலையிலும், பிற்பகலிலும், இரண்டு



ஆட்டுக்குட்டிகள் பலி செலுத்தப்பட்டது என்று சொல்லப்பட்டது. இவைகள் இயேசு காலையில் சிலுவையில் பலி செலுத்தினதையும், பிற்பகலில் அவரது மரணத்தையும் முன்னறிவித்தது."(3) மேலும் நீ அவர்களை நோக்கி - நீங்கள் கர்த்தருக்குச் செலுத்தவேண்டிய தகனபலி என்னவென்றால் - நித்திய சர்வாங்க தகனபலியாக நாடோறும் ஒரு வயதான பழுதற்ற இரண்டு ஆட்டுக்குட்டிகளைப் பலியிடவேண்டும். (4) காலையில் ஒரு ஆட்டுக்குட்டியையும், மாலையில் ஒரு ஆட்டுக்குட்டியையும் பலியிட்டு.."

இரண்டு ஆட்டுக்குட்டிகள் - ஒன்று காலையில் இஸ்ரயேலருக்கும், மற்றொன்று மாலையில் அனைத்து புறஜாதிகளுக்கும்.

## சிலுவையில் ஆறு மணி நேரம்

இயேசு காலை 9 மணிக்கு சிலுவையில் அறையப்பட்டு, மாலை 3 மணிக்கு மரித்தார். இந்த அனுபவம் ஆறு மணிநேரம் நீடித்தது. ஒருவேளை இது 6000 ஆண்டுகளாக நீடித்த மனுக்குலத்தின் பாவங்களுக்கான பரிகாரத்தை, இயேசுவின் மரணம் அடையாளமாக இருக்கலாம்.

## சப்பாணியைக் குணப்படுத்துதல்

அப்போஸ்தலர் 3:1-10ல் உள்ள இந்த சம்பவம், ஒன்பதாம் மணி நேரத்தில்,அதாவது பிற்பகல் மூன்று மணிக்கு நிகழ்ந்தது. "ஜெபவேளையாகிய ஒன்பதாம் மணி நேரத்திலே பேதுருவும் யோவானும் தேவாலயத்துக்குப் போனார்கள்." அங்கு அவர்கள் பிச்சைகேட்டு கொண்டிருந்து ஒரு பிறவி சப்பாணியை சந்தித்தார்கள். வெள்ளியும் பொன்னும் என்னிடத்திலில்லை, என்னிடத்திலுள்ளதை உனக்குத் தருகிறேன் என்று சொல்லி, "நசரேயனாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே நீ எழுந்து நட என்று" பேதுரு சொன்னார். (வசனம் 6)அந்த சப்பாணி குணமடைந்தான்.

இந்த சப்பாணி ஒரு வேளை இந்த உலகத்தின் மனுக்குலத்தை அடையாளப் படுத்தலாம். ஆதாமின் பாவத்தினால் முடமானவன். பிற்பகல் 3 மணிக்கு ஆதாம் மற்றும் மனுக்குலத்திற்காக இயேசு மரித்த நேரம் சரியாக ஒத்திருக்கிறது.

## கிறிஸ்துவைப் பிரசங்கித்தல்


கடவுள் தனது மீட்பின் திட்டத்தின் ஒவ்வொரு கட்டத்தின் முன்னறிவிப்பு, நோக்கம் மற்றும் கவனமாக திட்டமிடுதல் ஆகியவற்றை வெளிப்படுத்த பல விவரங்களைக் காண்கிறார். கடவுளைத் தவிர, நம்முடைய கர்த்தராகிய இயேசுவை விட வேறு யாருக்கும் இந்தத் திட்டத்தில் ஆழ்ந்த ஈடுபாடும், அர்ப்பணிப்பும், ஒப்புக்கொடுத்தலும் இல்லை. எனவே இயேசுவின் வாழ்க்கை மற்றும் ஊழியத்தின் பதிவேட்டைப் பற்றிய பல விவரங்கள் அடையாள அர்த்தத்தைக் கொண்டிருப்பது எதிர்பார்த்த ஒன்றாகும்.

முதலில் யூத விசுவாசிகளுக்கும், பின்னர் புறஜாதி விசுவாசிகளுக்கும் பரிசுத்த ஆவியினால் ஆசீர்வாதம் கொடுக்கப்பட்டது - காலை 9 மணி மற்றும் மாலை 3 மணி -

6000 வருடங்கள் பாவம் மற்றும் மரணத்திலிருந்து மனுக்குலத்தை மீட்பதற்காக இயேசு மரித்தார் என்பதை இந்த இடைவெளி நமக்கு நினைப்பூட்டுகிறது. இறுதி முடிவுகள் மிகவும் உறுதியானவை.

## ஒரு நீண்ட வரலாறு, சுருக்கமாக

# யெகோவா தேவனிடமிருந்து ஒரு பனித்துளி



David Rice

"யாக்கோபிலே மீதியானவர்கள் கர்த்தராலே வருகிற பனியைப்போலவும், மனுஷனுக்குக் காத்திராமலும், மனுபுத்திரருக்குத் தாமதியாமலும், பூண்டுகள் மேல் வருகிற மழைகளைப்போலவும், அநேக ஜனங்களின் நடுவிலே இருப்பார்கள்." (மீகா *5:7*)

மீகா தீர்க்கதரிசி ஏசாயாவின் இளைய சமகாலத்தவர். சில சமயங்களில் மீகா புத்தகத்தில், ஏறக்குறைய ஒரே மாதிரியான மொழியில் ஏசாயாவின் எழுத்துக்களுடன் நெருங்கிய ஒற்றுமைகள் காணப்படுகிறது. சில சந்தர்ப்பங்களில் மீகா தன்னுடைய மூத்தவரின் தீர்க்கதரிசினங்களிலிருந்து எடுத்துகொள்கிறார். ஏசாயாவின் மிகவும் பிரபலமான தீர்க்கதரிசனங்களில் ஒன்று இதற்கு ஒரு உதாரணத்தை வழங்குகிறது. "கடைசி நாட்களில் கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம் பர்வதங்களின் கொடுமுடியில் ஸ்தாபிக்கப்பட்டு, மலைகளுக்கு மேலாய் உயர்த்தப்படும், எல்லா ஜாதிகளும் அதற்கு ஓடிவருவார்கள்.(3) திரளான ஜனங்கள் புறப்பட்டு வந்து - நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும், யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள், அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார், நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள், ஏனெனில் சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும்." (ஏசாயா 2:2,3)


தேவனுடைய இராஜ்யத்தைப் பற்றிய இந்த அருமையான தீர்க்கதரிசனம் மீகா 4:1, 2 ல் மீண்டும் மீண்டும் கூறப்பட்டுள்ளது. "(1) ஆனாலும் கடைசி நாட்களில் கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம் பர்வதங்களின் கொடுமுடியில் ஸ்தாபிக்கப்பட்டு, மலைகளுக்கு மேலாய் உயர்த்தப்பட்டிருக்கும், எல்லா ஜாதிகளும் அதனிடத்திற்கு ஓடிவருவார்கள்.(2) திரளான ஜாதிகள் புறப்பட்டு வந்து - நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும், யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள், அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார், நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள், ஏனெனில் சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும்."

மேலே மேற்கோள் காட்டப்பட்ட இரண்டு ஜோடி வசனங்களை விட அதில் காணப்படும் இணை பெரிது. இந்த இரண்டு தீர்க்கதரிசிகளுக்கு இடையே உள்ள தொடர்பைக் காட்ட இது போதுமானது. பாபிலோன் யூதாவை சிறைபிடித்து கைதிகளாக எடுத்துச் செல்லும் பிற்காலத்தைப் பற்றியும் ஏசாயா தீர்க்கதரிசனம் உரைத்தார். ஏசாயா 39ம் அதிகாரம் இதை பற்றியது. இந்த ஒரு வசனம் இதை வெளிப்படுத்த போதுமானது - "நீ பெறப்போகிற உன் சந்ததியாகிய உன் குமாரரிலும் சிலர் பாபிலோன் இராஜாவின் அரமனையிலே அரமனை வேலைக்காரராயிருப்பார்கள் (அண்ணகராய் இருப்பார்கள்) என்று கர்த்தர் சொல்லுகிறார். "(ஏசாயா 39:7) மீகா 4:10 இதையே வெளிப்படுத்தியது. "சீயோன் குமாரத்தியே, பிரசவ ஸ்திரீயைப்போல அம்பாயப்பட்டு வேதனைப்படு, நீ இப்போது நகரத்திலிருந்து புறப்பட்டு, வெளிகளில் தங்கி, பாபிலோன் வரைக்கும் போவாய், அங்கே விடுவிக்கப்படுவாய், அங்கே கர்த்தர் உன்னை உன் சத்துருக்களின் கைக்கு நீங்கலாக்கி மீட்பார்."மீகா ஐந்தாம் அதிகாரத்தின் முதல் ஆறு வசனங்களை ஆராய்வதற்கு பின் இந்த உரையை பார்க்கலாம்.

### மீகா 5

இந்த அதிகாரத்தின் ஆரம்ப வசனங்கள், சிதேக்கியாவின் நாட்களில் இருந்து, புலம்பெயர்ந்தோர் மூலம் இயேசு வரையிலான இஸ்ரயேலின் வரலாற்றின் மிக சுருக்கமானதும், ஈர்க்கக்கூடியதுமான சுருக்கத்தில் காணப்படுகிறது. இயேசுவின் மேன்மை, இஸ்ரயேலின் விடுதலை மற்றும் ஒரு இனிமையான, புத்துணர்ச்சியூட்டும் அறிமுகத்தைத் தருகின்றன. சீரமைக்கப்பட்ட இஸ்ரயேலில் இருந்து கிறிஸ்துவின் இராஜ்யம் வெளிப்படுகிறதை காண்பிக்கிறது.

### வசனம் - 1



"சேனைகளையுடைய நகரமே, இப்போது தண்டுதண்டாகக் கூடிக்கொள், நமக்கு விரோதமாக முற்றிக்கை போடப்படும், இஸ்ரயேலுடைய நியாயாதிபதியைக் கோலினால் கன்னத்திலே அடிப்பார்கள்" (மீகா5:1) இந்த வசனத்தில் "இஸ்ரயேலின் நியாயாதிபதிகள்" என்பது நேபுகாத்நேச்சார் இஸ்ரயேலின் இராஜ்யத்தை முழுவதுமாக அகற்றுவதற்கு முன்பு இஸ்ரயேலை கடைசியாக ஆட்சி செய்த சிதேக்கியாவைக் குறிக்கிறது. இஸ்ரயேலர்கள் நேபுகாத்நேச்சாரால் மூன்று முறை சிறைப்பிடிக்கப்பட்டனர். (1) யோயாக்கீமின் துவக்க ஆண்டில், இராஜாக்கள், நாளாகமமம் மற்றும் எரேமியாவில் 4 ஆம் ஆண்டாக எண்ணப்பட்டது, ஆனால் தானியேல் எழுதிய ஆண்டு 3 என, பாபிலோனில் ஆட்சியாளர்களுக்கான பொதுவான எண்ணிக்கை சேர்க்கை ஆண்டு முறையின்படி இருந்தது. (ஒருவரின் ஆட்சி தொடங்கும் ஆண்டு முன்னோடிக்கு எண்ணப்படுகிறது, புதிய வாரிசுக்கு அல்ல)

யோயாக்கீமின் குமாரனும் வாரிசுமான யோயாக்கீனின் ஆட்சியில் ஆரம்பம். யோயாக்கீன் மூன்று மாதங்கள் ஆட்சி செய்தார். ஆனால் அவருடைய மீதியுள்ள காலங்கள் நேபுகாத்நேச்சாரின் நீண்ட ஆட்சியின் போது சிறையிருப்பில் இருந்தார். நேபுகாத்நேச்சாரின் வாரிசான ஏவில் மெரொதாக் அவரை உயர்த்தினார். (2இராஜாக்கள் 25:27) இந்த சிறையிருப்பில்தான் எசேக்கியேல் பாபிலோனுக்குக் கொண்டு செல்லப்பட்டார். சிதேக்கியாவின் ஆட்சியின் முடிவு, யூதா மற்றும் இஸ்ரயேல் இராஜ்யத்தையும் முடிவுக்குக் கொண்டுவந்தது. சிதேக்கியா எரேமியாவின் அறிவுரைக்கு மாறாக, நேபுகாத்நேச்சாருக்கு விசுவாசமாக இருப்பதற்காக கொடுத்த உறுதிமொழியை மறுத்துவிட்டார், இதனால் அவர் மிகவும் வேதனைப்பட்டார். சிறைபிடிக்கப்பட்டபோது, தனது குமாரர்கள் தனக்கு முன்பாக கொல்லப்பட்டதைக் கண்டார், பின்னர் அவரது கண்கள் பிடுங்கப்பட்டன, அவர் சிறைப்பிடிக்கப்பட்ட நிலையில் மரித்தார். (2இராஜாக்கள் 25:7)

## வசனம் - 2

"எப்பிராத்தா என்னப்பட்ட பெத்லகேமே, நீ யூதேயாவிலுள்ள ஆயிரங்களுக்குள்ளே சிறியதாயிருந்தும், இஸ்ரயேலை ஆளப்போகிறவர் உன்னிடத்திலிருந்து புறப்பட்டு என்னிடத்தில் வருவார், அவருடைய புறப்படுதல் அநாதிநாட்களாகியபூர்வத்தினுடையது."

இந்த உரை இஸ்ரயேலை ஆண்ட அடுத்த இராஜாவாகிய இயேசுவின் பிறப்பைப் பற்றி பேசுகிறது.



இது ஐந்து நூற்றாண்டுகளுக்கு மேலாக முன்னோக்குகிறது. கிழக்கிலிருந்து வந்த ஞானிகள் இஸ்ரயேலின் புதிய இராஜாவின் பிறப்பிடத்தைத் தேடியபோது, இது இயேசுவின் பிறப்பிற்குப் பொருந்துவதாக மத்தேயு 2:6இல் இந்த வசனம் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது. இஸ்ரயேல் ஒரு தேசமாக இயேசுவை ஏற்றுக்கொள்ளவில்லை. வெகு சிலரே பொந்தெகொஸ்தே நாளில் திறக்கப்பட்ட அற்புதமான பரலோக அழைப்பைப் பெற முடிந்தது. ஆனால் சிலுவையில் அறையப்படுவதற்காக ரோமானிய வல்லரசிடம் தங்களுக்கு விதிக்கப்பட்ட மேசியாவை ஒப்படைத்ததற்காக ஒட்டுமொத்த தேசமும் தூக்கி எறியப்பட்டது. "எருசலேமே, எருசலேமே, தீர்க்கதரிசிகளைக் கொலைசெய்து, உன்னிடத்தில் அனுப்பப்படவர்களைக் கல்லெறிகிறவளே, கோழி தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளின் கீழே கூட்டிச் சேர்த்துக் கொள்ளும்வண்ணமாக நான் எத்தனை தரமோ உன் பிள்ளைகளைக் கூட்டிச் சேர்த்துக்கொள்ள மனதாயிருந்தேன், உங்களுக்கோ மனதில்லாமற்போயிற்று. இதோ, உங்கள் வீடு உங்களுக்கு பாழாக்கிவிடப்படும். " (மத்தேயு 23:37,38)

## வசனம் - 3

இதன் விளைவாக, யுகத்தின் முடிவில் அவர்கள் மீட்கப்படுவதற்கு முன்பு, இஸ்ரயேல் பல நூற்றாண்டுகளுக்குத் தூக்கி எறியப்பட்டது. "ஆனாலும் பிரசவிக்கிறவன் பிரசவிக்கிறமட்டும் அவர்களை ஒப்புக்கொடுப்பார், அப்பொழுது அவருடைய சகோதரரில் மீதியானவர்கள் இஸ்ரயேல் புத்திரரோடுங்கூடத் திரும்புவார்கள்."

சுகப்பிரசவம் முடியும் வரை அவர்கள்

கைவிடப்படுவார்கள் என்ற குறிப்பைக் கவனிக்க வேண்டும். இந்தக் கட்டுரையில் முன்பு மேற்கோள் காட்டப்பட்ட மீகா 4:10 வில் உள்ள வேதனையைப் பற்றிய முந்தைய குறிப்புக்கு இது ஒரு குறிப்பாகும். அப்படியானால், இஸ்ரயேல் பாபிலோனுக்குப் புறப்பட்டு, பின்னர் பாபிலோனிலிருந்து விடுவிக்கப்பட்டு, தங்கள் தேசத்தில் மீண்டும் நிலைநிறுத்தப்படும்போது மீண்டும் பிறக்க வேண்டும். ஆயினும்,தீர்க்கதரிசன நிறைவேற்றத்தில், மீகா 5:3 ல் சொல்லர்த்தமான பாபிலோனிய சிறையிருப்புக்குப் பிறகு நீண்ட காலம் ஆகிறது. மீகா 5:2, இயேசுவின் முதல் வருகையைப் பற்றி தெளிவாக உள்ளது. அப்போது பழைய பாபிலோன் முதன்மையான வல்லமையுள்ள பேரரசாக இல்லை. இருப்பினும், ஒரு புதிய, ஆவிக்குரிய பாபிலோன் கிறிஸ்தவ சகாப்தத்தில் ஆதிக்கம் செலுத்தும் என்று வெளிப்படுத்துதலில் தெளிவாக உள்ளது. கிறிஸ்தவ உலகில் போப்பமைப்புக்கு 1260 வருடங்கள் உயர் அதிகாரம் இருந்தது. வெளிப்படுத்துதல் 17:5இல் போப் அமைப்பு ஒரு வேசியாக குறிப்பிடப்படுகிறது, மேலும் பாபிலோன் என்ற பெயர் அவளுக்குப் பயன்படுத்தப்படுகிறது. "மேலும்,இரகசியம், மகா பாபிலோன், வேசிகளுக்கும் பூமியிலுள்ள அருவருப்புகளுக்கும் தாய் என்னும் நாமம் அவள் நெற்றியில் எழுதியிருந்தது." இஸ்ரயேல் பல்வேறு இடங்களில் சிதறடிக்கப்பட்டது, அவற்றில் பெரும்பாலானவை போப் அமைப்புடன் இணைந்த நாடுகளால் ஆளப்பட்டது. இவ்வாறு மீகா 5:3, இஸ்ரயேலின் சிதறடிப்பின் நீண்ட நூற்றாண்டுகளைப் பற்றி பேசுகிறது.

### வசனம் - 4

"அவர் நின்றுகொண்டு, கர்த்தருடைய பலத்தோடும் தம்முடைய தேவனாகிய கர்த்தருடைய நாமத்தின் மகத்துவத்தோடும் மேய்ப்பார், ஆகையால் அவர்கள் நிலைத்திருப்பார்கள், அவர் இனிப் பூமியின் எல்லைகள் பரியந்தமும் மகிமைப்படுவார்."

இது இயேசுவைக் குறிக்கிறது, இஸ்ரயேல் சிதறடிக்கப்பட்ட சுவிசேஷ யுகத்தின் போது ஆண்டவருடைய நாமம் " பூமியின் எல்லைகள் பரியந்தமும் மகிமைப்படுவார்." தானியேல் 11ம் அதிகாரத்தில் ஒரு இராஜா ஆட்சிக்கு வருவதைக் குறிப்பதாக "நின்று" என்ற வார்த்தை அடிக்கடி பயன்படுத்தப்படுகிறது.

இதே நோக்கத்திற்காக தானியேல் 12:1இல், இயேசுவுக்கே (மிகாயேல்) இந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. மீகா 5:4இல் உள்ள "உணவு" என்ற வார்த்தை NIVஇல் அவரது மந்தையை "மேய்ப்பவன்" என்று கொடுக்கப்பட்டுள்ளது. இந்த வார்த்தை ஒரு மேய்ப்பன் தனது மந்தையை ஆள்வது போல, ஒரு இராஜா தனது ஜனங்களை ஆளுவதைக் குறிக்கிறது. "உணவு" என்ற வார்த்தைக்கான margin of the King James Cambridge edition லில் "கட்டளை" அல்லது "ஆட்சி" என்று கொடுக்கப்பட்டுள்ளது. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், சுவிசேஷ யுகத்தின் போது இயேசு நின்று (இராஜரீக அதிகாரத்தோடு) கர்த்தருடைய பலத்தில் தம்முடைய மந்தையை மேய்ப்பார்."அதே நேரத்தில் மாம்ச இஸ்ரயேல் சிதறடிக்கப்பட்டு, ஆவிக்குரிய இஸ்ரயேலர் நம் இராஜாவாகிய இயேசுவால் வழிநடத்தப்பட்டு, ஆளப்பட்டும், மேய்க்கப்படுவார்கள்.

### வசனம் - 5

"இவரே சமாதான காரணர், அசீரியன் நம்முடைய தேசத்திலே வரும் போதும், நம்முடைய அரண்மனைகளை மிதிக்கும்போதும், ஏழு மேய்ப்பரையும் மனுஷரில் எட்டு அதிபதிகளையும் அவனுக்கு விரோதமாக நிறுத்துவேன்."

யுகத்தின் முடிவில், இஸ்ரயேலரின் கடைசி அவல நிலையில், இயேசுவாகிய இதே ஆட்சியாளரே அவர்களின் இரட்சிப்பு என்று கூறப்படுகிறார். தீர்க்கதரிசி மீகாவின் நாட்களில் இஸ்ரயேலுக்கும் யூதாவுக்கும் எதிரான அசீரியர்களின் அச்சுறுத்தல் இங்கே குறிப்பிடப்படுகிறது. கிமு 723 இல் அசீரியா வடக்கின் 10 கோத்திரங்களான சமாரியாவைக் கைப்பற்றியது. மேலும் கிமு 701ல் எசேக்கியாவின் நாட்களில் எருசமேலைக் கைப்பற்ற அச்சுறுத்தியது, யூதாவை சரணடையுமாறு கோரிய அசீரியாவின் இராஜாவான செனகெரிப்பால் அவர் அச்சுறுத்தப்பட்டார்.

இருப்பினும், வசனம் 5 இன் நிறைவேற்றத்தில், முந்தைய வசனங்கள் இயேசுவைப் பற்றி கூறியதன் பின்னணியில், அசீரியாவின் பேரரசு நேரடி அர்த்தத்தில் இனி பொருத்தமானதாக இருக்காது என்பது தெளிவாகிறது. பாபிலோனை ஆட்சி செய்த நபோபொலாசார் மற்றும் அவரது குமாரன் நேபுகாத்நேசார், அசீரியாவின் வல்லமையை தோற்கடித்தபோது அசீரிய தன் அதிகாரத்தை இழந்தது. ஆயினும், மீகா 5:2 நம்மை இயேசுவின் பிறப்பிற்கு பல நூற்றாண்டகளுக்குப் பிறகும், மூன்றாம் வசனம் இஸ்ரயேலின் புலம்பெயர்ந்தோர் வழியாகவும், நான்காம் வசனம் சுவிசேஷ யுகத்தின் போது ஆவிக்குரிய இஸ்ரயேலின் மீது இயேசுவின் ஆட்சிக்கும் நம்மை அழைத்துச் செல்கிறது. அதற்கு பின் 5ம் வசனத்தில், அசீரிய அச்சுறுத்தலுக்கு எதிராக அவர் சமாதானத்தை வழங்குவார் என்று இயேசுவைப் பற்றி கூறுகிறார். எனவே, இங்குள்ள அசீரியா மற்றொன்றின் அடையாளமாகவும், பிற்காலத்தில், யுகத்தின் முடிவில் இஸ்ரயேலுக்கு முக்கியமான அச்சுறுத்தலாக இருக்கும். இது எசேக்கியேல் 38 இல் குறிப்பிடப்பட்ட தாக்குதலாக இருக்கவேண்டும். தொடக்க வசனங்களில், கடவுள், இயேசு மற்றும் மகிமை அடைந்த சபையின் மூலம் இஸ்ரயேலை மீட்டு பாதுக்காப்பார் என்று வாசிக்கிறோம்.

ஏழு மேய்ப்பர்கள் - இராஜாக்களுக்கு அடையாளமாக - சுவிசேஷ யுகத்தின் ஏழு நிலைகளில் உருவாக்கப்பட்ட சபையாக இருக்கும். எட்டு பிரபுக்கள், இராஜ்யத்தின் தொடத்தில், எழுப்பப்படும் முற்பிதாக்கள், இவர்கள் இஸ்ரயேலுக்கு தங்கள் மீட்பரை சுட்டிக்காட்டுவார்கள். (சகரியாவின் கட்டுரையில் "அவரை குத்தினவர்களும் அவரை காண்பார்கள்" என்பதில் இதைப் பற்றிய கருத்துக்களை பார்க்கலாம்.)

**வசனம் - 6**

"இவர்கள் அசீரியா தேசத்தையும், நிம்ரோத்தின் தேசத்தையும் அதினுடைய வாசல்களுக்கு உட்புறமாகப் பட்டயத்திற்கு இரையாக்குவார்கள், அசீரியன் நம்முடைய தேசத்தில் வரும் போது, நம்முடைய எல்லைகளை மிதிக்கும்போது அவனுக்கு நம்மைத் தப்புவிப்பார்."

இஸ்ரயேலின் இந்த விடுதலையில் குறிப்பிடப்பட்டுள்ள செயலில் உள்ள வல்லமைகளைக் கவனியுங்கள்."இவர்கள் அசீரியா... பட்டயத்திற்கு இரையாக்குவார்கள்." 1948, 1967,1973 இல் இஸ்ரயேல் நேரடியாகப் போரிட்டது போல் இது இருக்காது. இந்த விஷயத்தில் "அவர்கள்" என்பது வசனம் 5 இன் சொல்லப்பட்ட வல்லமைகளாகிய - ஏழு இராஜாக்கள் (மகிமை அடைந்த சபை) மற்றும் எட்டு பிரபுக்கள் (முற்பிதாக்கள்). இந்த வெற்றிக்காக இஸ்ரயேல் ராக்கெட்டுகளையோ, ஏவுகணைகளை சுடவோ, கொடிய படைகளை அனுப்பவோ தேவையில்லை.

கடந்த காலங்களில் அப்படித்தான் இருந்தது. மீகா 4:13 இல் இஸ்ரயேல் தங்கள் எதிரிகளை இரும்புக் கொம்புகளாலும், பித்தளைக் குளம்புகளாலும் "நொறுக்கிப்போடுவார்கள்." மேலும் பலரைத் துண்டு துண்டாக வெட்டுவார்கள். ஆனால்



இந்த விஷயத்தில் அப்படி இல்லை. இஸ்ரயேலின் செல்வாக்கு இராணுவ வெற்றியாளராக இருக்காது. மாறாக சமாதானமும், இனிமையான ஆசீர்வதிக்கப்பட்ட செல்வாக்காக இருக்கும்."யாக்கோபிலே மீதியானவர்கள் கர்த்தராலே வருகிற பனியைப்போலவும், மனுஷனுக்குக் காத்திராமலும், மனுபுத்திரருக்குத் தாமதியாமலும், பூண்டுகள் மேல் வருகிற மழைகளைப்போலவும், அநேக ஜனங்களின் நடுவிலே இருப்பார்கள்." (மீகா 5:7)

அதிகாலையில் ஒருவர் வானத்திலிருந்து வரும் இனிமையான நறுமணம் மற்றும் புதிய பனி - அல்லது புல் மீது மென்மையான மழையை அனுபவிப்பதற்கு எழுவது - ஒரு ஆசீர்வதிக்கப்பட்ட, புத்துணர்ச்சியூட்டும் செல்வாக்கு ஆகும். இஸ்ரயேலுக்கும் அப்படித்தான் இருக்கும்.

## இரண்டு எடுத்துக்காட்டுக்கள்

ஏசாயா மற்றும் மீகாவின் சமகாலம் எசேக்கியாவின் ஆட்சியின் போது யூதாவிற்கு எதிராக அசீரிய சனகெரிபின் படையெடுப்பாகும்.ஏசாயா அதிகாரங்கள் 36,37,38 இல் இது விரிவாக விளக்கப்பட்டுள்ளது. எசேக்கியா சனகெரிப்பிடமிருந்து அச்சுறுத்தும் கோரிக்கையை ஆலயத்திற்கு கொண்டு வந்து, கடவுளிடம் பிரார்த்தனை செய்தார், மேலும் ஏசாயா தீர்க்கதரிசி மூலம் பதிலுக்காக காத்திருந்தார். "ஆகையால் கர்த்தர் அசீரியா இராஜாவைக்குறித்து - அவன் இந்த நகரத்துக்குள் பிரவேசிப்பதில்லை, இதின்மேல் அம்பு எய்வதுமில்லை, இதற்கு முன்பாகக் கேடகத்தோடே வருவதுமில்லை, இதற்கு எதிராகக் கொத்தளம் போடுவதுமில்லை." என்று கடவுள் பதிளித்தார். (ஏசாயா 37:33)

அதேபோல, "அப்பொழுது கர்த்தருடைய தூதன் புறப்பட்டு, அசீரியரின் பாளயத்தில் லட்சத்தெண்பத்தையாயிரம் பேரைச் சங்கரித்தான், அதிகாலமே எழுந்திருக்கும் போது, இதோ, அவர்களெல்லாரும் செத்த பிரேதங்களாய்க் கிடந்தார்கள்.அப்பொழுது அசீரியா இராஜாவாகிய சனகெரிப் பிரயாணப்பட்டுத்திரும்பிப்போய், நினிவேயில் இருந்து விட்டான்."(ஏசாயா 37:36, 37) இதற்கு நீண்ட காலத்திற்கு முன், முந்தைய யூத இராஜாவாகிய யோசபாத்துக்கு எதிராக போர் தொடுக்க அம்மோன், மோவாப் மற்றும் ஏதோன் ஆகிய மூன்று நாடுகள் ஒன்று கூடினார்கள். இவைகளைப்



பற்றி 2நாளாகமம் 20ம் அதிகாரத்தில் காணலாம். "யூதா கோத்திரத்தார் அனைவரும், அவர்கள் குழந்தைகளும், அவர்கள் பெண்ஜாதிகளும், அவர்கள் குமாரருங்கூடக் கர்த்தருக்கு முன்பாக நின்றார்கள்."(வசனம் 13) அப்போது தீர்க்கதரிசியான யகாசியேல் தேவனுடைய சார்பில் பதில் அளித்தார் - "... இந்த யுத்தம் உங்களுடையதல்ல, தேவனுடையது....இந்த யுத்தத்தைப் பண்ணுகிறவர்கள் நீங்கள் அல்ல, அவர்கள் அதிகாலமே எழுந்திருந்து...பரிசுத்தமுள்ள மகத்துவத்தைத் துதிக்கவும், ஆயுதம் அணிந்தவர்களுக்கு முன்னாக நடந்துபோய், ... அவர்கள் பாடித் துதிசெய்யத் தொடங்கினபோது.... அம்மோன் புத்திரரையும், மோவாபியரையும், சேயீர் மலைத் தேசத்தாரையும் (ஏதோம்) ஒருவருக்கு விரோதமாய் ஒருவரைக் கர்த்தர் எழும்பப்பண்ணினதினால் அவர்கள் வெட்டுண்டு விழுந்தார்கள்." (வசனங்கள் 15,17,20,22)

இஸ்ரயேலுக்கு வரப்போகும் மாபெரும் விடுதலையும் இப்படியாகவே இருக்கும். வெற்றி மேலிருக்கும் கடவுளுடையது. அதற்குப் பின் இஸ்ரயேலிலிருந்து வரும் செல்வாக்கு "யெகோவா தேவனிடமிருந்து வரும் பனியாக" இருக்கும்.

நான்கு யுத்தங்கள்

# அவரை குத்தினவர்களும்



"நான் தாவீது குடும்பத்தாரின்மேலும் எருசலேம் குடிகளின்மேலும் கிருபையின் ஆவியையும் விண்ணப்பங்களின் ஆவியையும் ஊற்றுவேன், அப்பொழுது அவர்கள் தாங்கள் குத்தின என்னை நோக்கிப்பார்த்து, ஒருவன்தன் ஒரே பெறானவனுக்காகப் புலம்புகிறதுபோல எனக்காகப் புலம்பி, ஒருவன் தன் தலைச்சன் பிள்ளைக்காகத் துக்கிக்கிறதுபோல எனக்காக மனங்கசந்து துக்கிப்பார்கள்." (சகரியா *12:10*)


நம்முடைய இந்த வசனம் பொதுவான ஒன்றாகும். வேதமாணவர்களிடையே நன்கு அறியப்பட்டதாகும். இந்த வசனப் பகுதி இன்னும் நிறைவேற வில்லை. ஆனால் அதன் நிறைவேற்றம் நெருங்கி வருகிறது. நீண்ட காலத்திற்கு முன்பு அப்போஸ்தலன் யோவான் சிலுவையில் இயேசுவின் மரணத்தை பதிவு செய்யும் போது இந்த உரையை குறிப்பிட்டார். "(34) ஆகிலும் போர்ச்சேவகரில் ஒருவன் ஈட்டியினாலே அவருடைய விலாவில் குத்தினான் உடனே இரத்தமும் தண்ணீரும் புறப்பட்டது. (36) அவருடைய எலும்புகளில் ஒன்றும் முறிக்கப்படுவதில்லை என்கிற வேதவாக்கியம் நிறைவேறும்படி இவைகள் நடந்தது. (37) அல்லாமலும் தாங்கள் குத்தினவரை நோக்கிப்பார்ப்பார்கள் என்று வேறொரு வேதவாக்கியம் சொல்லுகிறது." (யோவான் 19:34-37)

இயேசுவின் எலும்புகள் எதுவும் முறிக்கப்படவில்லை என்பது யாத்திராகமம் 12:46 ல் உள்ள பஸ்கா ஆட்டுக்குட்டியின் பிரமாணத்தில் வருகிறது. இது எண்ணாகமம் 9:12 லும் மீண்டும் சொல்லப்படுகிறது. "அதில் ஒரு எலும்பையும் முறிக்காமலும்..." எலும்புகள் வருங்காலத்திற்கான ஒருவரின் விசுவாசத்தைக் குறிக்கின்றது. உதாரணமாக, இது எசேக்கியேல் 37இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அங்கு பள்ளத்தாக்கில் சிதறிக்கிடக்கும் எலும்புகள் இஸ்ரயேலின் விசுவாசத்தை அடையாளப்படுத்துகிறது. "அவர்கள் எங்கள் எலும்புகள் உலர்ந்துபோயிற்று, எங்கள் நம்பிக்கை அற்றுப்போயிற்று, நாங்கள் அறுப்புண்டுபோகிறோம் என்கிறார்கள்." (எசேக்கியேல் 37:11)

ஆனால் விரைவில், எலும்புகளுக்குள் ஒரு அசைவுண்டாயிற்று, ஒவ்வொரு எலும்பும் தன்தன் எலும்போடே சேர்ந்துகொண்டது, அவைகளின் மேல் நரம்புகளும் மாம்சமும் உண்டாயிற்று. மேற்புறமெங்கும் தோலினால் மூடப்பட்டது. இது திரும்ப கூட்டிச்சேர்க்கப்பட்ட இஸ்ரயேலைக் குறிக்கிறது. இயேசுவைப் பொறுத்தவரை, அவர் சிலுவையில் ஒரு கொடூரமான மரணம் அடைந்தாலும், அவருடைய எலும்புகளில் ஒன்று கூட முறிக்கப்படவில்லை - அதாவது எதிர்காலத்திற்கான அவரது நம்பிக்கைகளில் ஒன்று கூட சேதமடையவில்லை.

யோவான் 19:37ல் "தாங்கள் குத்தினவரை நோக்கிப்பார்ப்பார்கள்" என்ற குறிப்பு, நம்முடைய ஆதார வாசனமாக சகரியா 12:10ல் இருந்து வருகிறது. அங்கிருந்துதான் யோவான் மேற்கோள் காட்டினார். இந்த சுருக்கமான வெளிப்பாட்டில் சிறப்பு ஆர்வமுள்ள இரண்டு வார்த்தைகள் உள்ளது. அதாவது "மேல்" மற்றும் "தன்னை". இந்தக் கட்டுரையின் தொடக்க வசனத்தில் மேற்கோள் காட்டப்பட்ட பதிப்பில், "அவர்கள்என்னை நோக்கிப்பார்த்து" என்று கூறப்படுகிறது. சுமார் 2000 ஆண்டுகளாக மகிமையின் இராஜாவை நிராகரித்ததற்காக முதலில் ஆழ்ந்த மனந்தரும்புதலுடனும் துக்கத்துடனும் இஸ்ரயேல் ஜனங்கள் இயேசுவை நோக்கிப் பார்ப்பதால், "என்னை" என்ற வார்த்தை உதயமாக இருக்கும். அதன்பிறகு அவர்கள் இயேசுவை தங்கள் மேசியாவாகவும், இராஜாவாகவும், தலைவராகவும் பார்ப்பார்கள். அவர்களின் தேசிய மாற்றத்திற்காகவும், கிறிஸ்துவின் இராஜ்யத்தின் ஆசீர்வாதங்களை மனுக்குலத்திற்கு கொடுப்பதற்காகவும், அவர்கள் அவரிடமிருந்து வழிகாட்டுதலைப் பெறுவார்கள்.

"தாங்கள் குத்தினவரை நோக்கிப்பார்ப் பார்கள்"என்று யோவான் 19:37 கூறுகிறது. தாங்கள்



குத்தினவரை தங்களுடைய வழிநடத்துதலுக்காக அவரை நோக்கிப் பார்ப்பார்கள் என்று பொருள்படுகிறது. சகரியா 12:9இந்தக் கேள்விக்கு விடையளிக்கிறது. "அந்நாளிலே எருசலேமுக்கு விரோதமாய் வருகிற எல்லா ஜாதிகளையும் அழிக்கப் பார்ப்பேன்." (10)...கிருபையின் ஆவியையும் ...ஊற்றுவேன், அப்பொழுது அவர்கள் தாங்கள் குத்தின என்னை நோக்கிப்பார்த்து..." ஒரு குறிப்பிடத்தக்க விடுதலையின் முடிவாக இந்த தேசிய மீட்பு வரும். இந்த காலத்தைக் குறித்து யோயேல் பேசுகிறார். இஸ்ரயேல் படையெடுப்பின் தாக்குதல்களால், கடுமையாக நெருக்கப்படும் போது இவ்வாறு அறிவுறுத்தப் படுகிறது."நீங்கள் உங்கள் வஸ்திரங்களையல்ல, உங்கள் இருதயங்களைக் கிழித்து, உங்கள் தேவனாகிய கர்த்தர் இடத்தில் திரும்புங்கள், அவர் இரக்கமும், மன உருக்கமும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையுமுள்ளவர், அவர் தீங்குக்கு மனஸ்தாபப்படுகிறவருமாயிருக்கிறார்." (யோயேல் 2:13) மீதியுள்ள 13ம் வசனமும், 14-17 வரையிலான வசனங்களும் விடுதலைக்காக இஸ்ரயேலர் கடவுளிடம் செய்யும்வேண்டுகோளின் ஆழத்தையும் நேர்மையையும் வலியுறுத்துகிறது. அதற்கு பின் 18-21 வசனங்களில் - "கர்த்தர் தமது தேசத்துக்காக வைராக்கியங் கொண்டு, தமது ஜனத்தைக் கடாட்சிப்பார்.... வடதிரைசச் சேனையை உங்களுக்குத் தூரமாக விலக்கி... அங்கே அதின் நாற்றம் எழும்பி, அதின் துர்க்கந்தம் வீசும், அது பெரிய காரியங்களைச் செய்தது. தேசமே பயப்படாதே, மகிழ்ந்து களிகூரு, கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்வார்." அவர் உறுதிப்படுத்துகிறார்.

ஆனால் கடவுளினால் செய்யப்படும் இந்த தேசிய விடுதலைக்கு, இஸ்ரயேல் ஜனங்கள் யாரிடம் ஊக்கத்துடன் ஜெபிப்பார்கள் ? இயேசுவை அவர்களின் விடுதலையில் ஆசீர்வதிக்கப்பட்ட முகவராக அங்கீகரிக்க அவர்களை எவ்வாறு வழிநடத்தப்படுவார்கள் ? இஸ்ரயேலுக்கு அவர்களின் விடுதலையின் மூலத்தை விளக்குவதற்காக எழுப்பப்பட்ட முற்பிதாக்களின் வழிகாட்டுதலும் விளக்கங்களும் இதற்கு தேவைப்படும் ஒன்றாகும். இது மீகா 5:5ல் சுட்டிக்காட்டப்படுவதாக தெரிகிறது. கடவுளின் இறுதியான விடுதலைக்கு இணையான ஒரு பத்தியாக இது காணப்படுகிறது. "இவரே சமாதான காரணர், அசீரியன் நம்முடைய தேசத்திலே வரும் போதும், நம்முடைய அரண்மனைகளை மிதிக்கும்போதும், ஏழு மேய்ப்பரையும் மனுஷரில் எட்டு அதிபதிகளையும் அவனுக்கு விரோதமாக நிறுத்துவேன்." மேய்ப்பன் என்பது ஒரு இராஜாவைக் குறிக்கும் - ஒரு மேய்ப்பன் தனது மந்தையை ஆள்வது போல, ஒரு இராஜா தனது ஜனங்களை



ஆளுகிறார். அதிபதிகள் என்பது பிரபுக்களை குறிக்கிறது. ஏழு இராஜாக்கள் மேலிருக்கும் மகிமை அடைந்த சபையாக இருப்பர்கள், இவர்கள் சுவிசேஷ யுகத்தில் ஏழு காலக்கட்டங்களில் உருவாக்கப்பட்டவர்கள். பூமியில் உள்ள எந்த வல்லமையினாலும் மேலிருந்து வரும் ஆவிக்குரிய வல்லமையை எந்த விதத்திலும் தடுக்கமுடியாது. எட்டு பிரபுக்கள் முற்பிதாக்கள். இவர்கள் பூமி எங்கும் பிரபுக்களாக இருப்பார்கள். (சங்கீதம் 45:16) எட்டு என்ற எண் அவர்களுக்கு பொருத்தமானது, ஏனென்றால் அவர்கள் சபையின் ஏழு நிலைகளைத் தொடர்ந்து வரும் "எட்டாம்" காலகட்டத்தில் எழுப்பப்படுவார்கள். அவர்கள் இஸ்ரயேலருக்கு தங்கள் விடுதலையின் மூலத்தை விளக்குவார்கள். பின்னர் பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு, அவர்கள் தங்கள் யோசேப்பாகிய இயேசுவை, தங்கள் நீதியுள்ள சகோதரர், பூமியின் ஆட்சியாளராக அடையாளம் கண்டுகொள்வார்கள். பின்னர் ஒரு தேசிய அளவிலான துக்கமும் மனந்திரும்புதலும் தொடங்கும். சகரியா 12:11-14,அவர்களின் மனந்திரும்புதல் மற்றும் மீட்பின் ஆழத்தை அடையாளமாக வெளிப்படுத்துகிறது. "தேசம் புலம்பிக்கொண்டிருக்கும், ஒவ்வொரு வம்சமும் தனித்தனியாகப் புலம்பும்."(வசனம் 12)

## அப்போஸ்தலர் 28

அப்போஸ்தலர்கள் நடபடிகள் 27 மற்றும் 28 ம் அதிகாரங்கள், பெரும்பாலும், சுவிசேஷ யுக அறுவடையின் முடிவான உபத்திரவங்களின் முன்னோட்டத்தையும் இராஜ்யத்தின் அறிமுகத்தையும் கருதுகிறது. இந்த விஷயத்தில் 14 நாள் புயல் "யூரோக்ளிடான்", இராஜ்யம்

ஸ்தாபிக்கப்படுவதற்கு முன் ஏற்படும் கடைசி பிரச்சனைகளை குறிக்கிறது. இந்த 14 நாட்கள் 14 வருடங்களாக நிறைவேறுமா ? பின்னர் 28ம் அதிகாரம், மெலித்தா தீவை அடையாளப்படுத்தும் இஸ்ரயேல் தேசத்தில், இராஜ்யத்தின் சிறப்பான திறப்பு விழாவைப் பற்றி பேசுகிறது. இங்கு பவுல் முற்பிதாக்களை அடையாளப்படுத்துகிறார். இவர்கள் கடவுளின் கரமாகிய மேசியாவை தங்கள் மீட்பராக அங்கீகரிப்பதற்கு இஸ்ரயேலுக்கு உதவுவதற்காக கடவுளின் பூமிக்குரிய பிரதிநிதிகள்.

அப்போஸ்தலர் 28:3"பவுல் சில விறகுகளை வாரி அந்த நெருப்பின்மேல் போடுகையில், ஒரு விரியன் பாம்பு அனலுறைத்துப் புறப்பட்டுஅவனுடைய கையைக் கவ்விக்கொண்டது. இங்கு அடையாளமாக முற்பிதாக்களின் ஆரம்ப வேலையாக உள்ளது. இப்படியாக இவர்கள் இஸ்ரயேலில் அறிமுகமாவார்கள். "விஷப்பூச்சி அவன் கையிலே தொங்குகிறதை அந்நியராகிய அந்தத் தீவார் கண்டபோது, இந்த மனுஷன் கொலைபாதகன்.இதற்குச் சந்தேகமில்லை, இவன் சமுத்திரத்துக்குத் தப்பிவந்தும், பழியானது இவனைப் பிழைக்கவொட்டவில்லை யென்று தங்களுக்குள்ளே சொல்லிக்கொண்டார்கள்." (வசனம் 4) ஆனால் பவுல் உடனடியாக அவர்களின் அச்சுறுத்தலை உதறிவிட்டார். " அந்தப் பூச்சியைத் தீயிலே உதறிப்போட்டு, ஒரு தீங்கும் அடையாதிருந்தான்.... நெடுநேரமாய் பார்த்துக்கொண்டிருந்தும், ஒருசேதமும் அவனுக்கு வராததைதை கண்டபோது, வேறு சிந்தையாகி, இவன் தேவனென்று சொல்லிக்கொண்டார்கள்."(5,6 வசனங்கள்) முற்பிதாக்கள் இஸ்ரயேலுக்கு ஒரு நல்ல வழியில் அவர்களை ஊக்குவிப்பார்கள் என்று இது அடையாளமாக காண்பிக்கிறது. ஆனால் பின்னர் சர்ப்பமாகிய சாத்தானின் தாக்குதல் தோன்றும். முற்பிதாக்கள் இந்த காரியத்தை உதறித் தள்ளும்போது, கடவுளின் அற்புதமான விடுதலையால், இஸ்ரயேல் ஜனங்கள் முற்பிதாக்களை கடவுளின் பிரதிநிதிகளாக அங்கீகரித்து, அவர்களின் வழிகாட்டுதலை ஏற்றுகொள்வார்கள். பவுல் முதலில் அந்த தீவின் தலைவரை குணப்படுத்தினார். பின்னர் அந்த தீவில் உள்ள அனைவரையும் குணப்படுத்தினார். மூன்று மாதங்களுக்குப் பிறகு அவர் தனது இலக்கான ரோம்,அதாவது உலக அரசாங்கத்தின் மையத்தை நோக்கி தொடர்ந்தார். எனவே முற்பிதாக்கள் இஸ்ரயேலின் தலைமையை மனந்திருப்பி, ஜனங்களுக்கு ஆவிக்குரிய சிகிச்சை அளித்து, சில காலத்திற்குப் பிறகு உலக அரசாங்கத்தின் மையத்திற்குச் செல்வார்கள். சரியாக வழிநடத்தப்பட்டால், இஸ்ரயேல் ஜனங்கள் மற்றும் தலைவர்கள் தேசிய அளவில் குணப்படுத்தலுக்கு முற்பிதாக்களால் வழிநடத்தப்படுவார்கள் என்பதையும் இது குறிக்கிறது. முற்பிதாக்கள் ஜனங்களின் கவனத்தை மேசியாவின் பக்கம் திருப்புவார்கள், இயேசுவை தங்கள் தலைவரும் இரட்கராகவும் தேசிய அளவில் அங்கீகரிப்பார்கள்.

## இராஜ்யத்திற்கு வழிவகுக்கும் நான்கு மோதல்கள்



சகரியா 12:10 வரையிலான வசனங்கள் இஸ்ரயேலின் தேசிய மனந்திரும்புதலுக்கு முந்திய நான்கு தேசிய மோதல்களைக் குறிப்பிடுகின்றன. சகரியா 12:6 "அந்நாளிலே யூதாவின் தலைவரை விறகுகளுக்குள்ளே எரிகிற அக்கினி அடுப்புக்கும், வைக்கோல் கட்டுகளுக்குள்ளே எரிகிற தீவட்டிக்கும் ஒப்பாக்குவேன், அவர்கள் வலதுபுறமும் இடதுபுறமுமாகப் புறப்பட்டு, சுற்றிலும் இருக்கிற

எல்லா ஜனங்களையும் பட்சிப்பார்கள், எருசலேம் திரும்பவும் தன் ஸ்தானமாகிய எருசலேமிலே குடியேற்றப்பட்டிருக்கும்."

இன்று இஸ்ரயேல் மீண்டும் எருசலேமைக் கைப்பற்றியுள்ளது. 1980 இல் அவர்கள் "எருசலேமின் பிரமாணத்தை" ஏற்றுக்கொண்டனர், எருசலேமை இஸ்ரயேலின் பிரிக்கப்படாத தலைநகராக அறிவித்தனர். 1948 இல் தேசிய சுதந்திரம் பெற்றபோது இஸ்ரயேல் பழைய எருசலேமைப் பெறவில்லை. 1967 ஆம் ஆண்டின் ஆறு நாள் போரின் விளைவாக அவர்கள் அதைப் பெற்றனர்,அதில் கடவுள் இஸ்ரயேலுக்கு ஒரு குறிப்பிடத்தக்க வெற்றியை கொடுத்தார். இது 6ம் வசனத்தில் விவரிக்கப்படுகிறது.

சகரியா12:7 "தாவீது வம்சத்தாரின் மகிமையும், எருசலேமின் குடிகளுடைய மகிமையும், யூதாவின்மேல் தன்னை உயர்த்தாதபடிக்கு, கர்த்தர் யூதாவின் கூடாரங்களை முதல் முதல் இரட்சிப்பார்." 1948 இல், இஸ்ரயேல் சுதந்திரம் பெற்றபோது, வளர்ந்து வரும் அரசை அழிக்க விரும்பிய அண்டை அரபு நாடுகளால் அவர்கள் (யுத்தத்திற்காக )சுற்றி வளைக்கப்பட்டார்கள். கடவுள் அவர்களை இந்த ஆபத்திலிருந்தும் காப்பாற்றினார். "யூதாவின் கூடாரங்கள்" என்பது 1948 முதல் இஸ்ரயேல் தக்கவைத்துள்ள மேற்குப் புறநகர்ப் பகுதிகளைக் குறிக்கிறது. "அந்நாளிலே கர்த்தர் எருசலேமின் குடிகளைக் காப்பாற்றுவார், அவர்களில் தள்ளாடினவன் அந்நாளிலே தாவீதைப்போல இருப்பான்,தாவீது குடும்பத்தார் அவர்களுக்கு முன்பாகத்தேவனைப்போலும் காத்தருடைய தூதனைப்போலும் இருப்பார்கள். " (சகரியா12:8) இந்த தீர்க்கதரிசனம் 1948 ம் வருடத்தில் நடந்த போரைக் குறிக்கவில்லை. ஏனென்றால் இஸ்ரயேலுக்கு இன்னும் பழைய எருசலேம் கிடைக்கவில்லை. இது 1967 ஆம் ஆண்டு நடந்தபோரை குறிக்காது, ஏனென்றால் இஸ்ரயேல் எருசலேமை இப்போது தான் கைப்பற்றியது. இஸ்ரயேலில் இருந்து எருசலேமை அகற்ற ஒரு வெற்றிகரமான படை முயற்சித்தது போது அது "பாதுகாக்கப்படவில்லை." இது 1973 இல் நடந்தபோரைக் குறிக்கிறது, எகிப்து மற்றும் சிரியா இஸ்ரயேலைத் தாக்கி கிட்டத்தட்ட வெற்றி பெற்றன. அது எதிர்பாராத தாக்குதலாக இருந்ததினால், இஸ்ரயேல் ஆயத்தமாக இல்லை. அதனால் இஸ்ரயேல் போராட்டத்தை இழந்திருக்கலாம். ஆனால் "எருசலேமில் வசிப்பவர்களைக் காப்பதாக" கடவுள் வாக்குறுதி அளித்திருந்தார், அவர் அப்படியே செய்தார். இஸ்ரயேல் மூன்று தேசிய போர்களை சந்தித்துள்ளது - 1948, 1967 மற்றும் 1973இல். சகரியா **12:7, 6, 8** - இந்த மூன்று வசனங்கள் இந்தப் போர்கள் ஒவ்வொன்றையும் அடையாளம் காட்டுகிறன்றது. 1973 முதல், இஸ்ரயேல் பல மோதல்களை சந்தித்தது, ஆனால் 50 ஆண்டுகளுக்கும் மேலாக தேசிய போர்கள் இல்லை. இருப்பினும் சகரியா **12:9**இல் தீர்க்கதரிசனத்தில் இன்னும் ஒரு தேசிய யுத்தம் குறிப்பிடப்பட்டுள்ளது. இது எசேக்கியேல் **38:1-6**ன் புகழ்பெற்ற பகுதியிலும் அடையாளம் காணப்பட்ட போராக இருக்கும்.அந்த நெருக்கடியில் வெற்றி என்பது குறிப்பிடத்தக்க மற்றும் தெளிவான முறையில் கடவுளால் வழங்கப்படும். "அந்நாளிலே எருசலேமுக்கு விரோதமாய் வருகிற எல்லா ஜாதிகளையும் அழிக்கப் பார்ப்பேன்." (சகரியா12:9)

சபை மேலே பரலோகத்திலிருந்து செயல்படும், முற்பிதாக்கள் கீழே இருக்கும் இஸ்ரயேலுக்கு திட்டத்தை விளக்குவார்கள், பின்னர் கிறிஸ்துவின் ஆசீர்வதிக்கப்பட்ட இராஜ்யம் தொடங்கும்.

மாநில அந்தஸ்து, சமாதான ஒப்பந்தங்கள், நிலத்தைப் பாதுகாத்தல்

# மூன்று கட்டங்களில் மீட்பு



"அந்நாளிலே கர்த்தர் ஆபிராமோடே உடன்படிக்கைபண்ணி, எகிப்தின் நதிதுவக்கி ஐபிராத்து நதி என்னும் பெரிய நதிமட்டுமுள்ளதும்.." (ஆதியாகமம் *15:18*)

இஸ்ரயேல் 1948 இல் தேசத்தை அடைந்தது, இது நன்கு அறியப்பட்ட மற்றும் நினைவில் இருக்கும் தேதி. இது மாநில உரிமைகளை தன்னிச்சையாக செயல்படும் ஆண்டு அல்ல என்று தெரிகிறது. 1878 இல் பெட்டா டிக்வாவின் குடியேற்றத்துடன் இஸ்ரயேல் தேசம் மீட்டெடுப்பு தொடங்கிறது. இது 1878 முதல் 1948 வரையிலான 70 வருடங்களாகும்.


நீண்ட காலத்திற்கு முன்பு, இஸ்ரயேல் சுதந்திரத்தை இழந்தபோது, 70 வருடங்கள், பாபிலோன் இவர்களை ஆட்சி செய்வதாக அறிவிக்கப்பட்ட காலத்தில் தான் இது நமக்கு நினைப்பூட்டுகிறது. "இந்தத் தேசமெல்லாம் வனாந்தரமும் பாழுமாகும், இந்த ஜாதிகளோ, எழுபது வருஷமாகப் பாபிலோன் இராஜாவைச் சேவிப்பார்கள்."(எரேமியா 25:11) எனவே, இஸ்ரயேல் ஒரு தேசமாக மீட்டெடுப்பதற்கான காலம் இஸ்ரயேல் தனது சுதந்திரத்தை இழந்த காலத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

### இரண்டாவது குறிப்பு

1948 ஆம் ஆண்டிற்கான மற்றொரு குறிப்பு உள்ளது. சில விஷயங்களில், வெள்ளம் போல அனுபவம் அதாவது கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்றதைப் பற்றி பேதுரு கூறினார். உலகத்திற்கு மேல் மிதந்த, மரத்தினால் செய்யப்பட்ட பேழை, உலகத்தின் சாபத்திலிருந்து கிடைக்கும் இரட்சிப்பைக் குறிக்கிறது. கிறிஸ்துவுக்குள் இருப்பர்கள் உலகின் கண்டனத்திலிருந்து இரட்சிக்கப்பட்டது போல, பேழையில் இருந்தவர்கள் அழிவிலிருந்து தப்பினர். பேழைக்குள் இருந்தவர்கள் தண்ணீரால் சூழப்பட்டது போல கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெறக்கூடியவர்களும் தண்ணீரால் சூழப்படுகிறார்கள்.

"...அந்தப் பேழையிலே சிலராகிய எட்டுப்பேர்மாத்திரம் காக்கப்பட்டார்கள். அதற்கு ஒப்பனையான ஞானஸ்நானமானது, மாம்ச அழுக்கை நீக்குதலாயிராமல், தேவனைப்பற்றும் நல்மனச்சாட்சியின் உடன்படிக்கையாயிருந்து, இப்பொழுது நம்மையும் இயேசுகிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலினால் இரட்சிக்கிறது." (1பேதுரு3:20, 21)

இயேசு கிபி 33 இல் மரித்தார், அவர் மரித்து, உயிர்த்தெழுந்து, பரமேறி, பெந்தெகொஸ்தே நாளில் வழி திறக்கும் வரை ஒருவரும் மீட்புப் பேழைக்குள் நுழைய முடியவில்லை. ஜலப்பிரளயத்தின் போது 40 நாட்கள் பெய்ந்த மழை இந்த அனுபவத்தை துவக்கியது. கிபி 33இல் இயேசு மரித்தபின் 40 ஆண்டுகளுக்குப் பிறகு கிபி 73 ல் மாசாடாவின் வீழ்ச்சி மற்றும் இஸ்ரயேலின் மீதான தீர்ப்புகளின் முடிவிற்கு நம்மை அழைத்துச் செல்கிறது. பேழையில் எட்டு நபர்கள் காப்பாற்றப்பட்டனர், பேழைக்கு வெளியே வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. தப்பினவர்கள் சுவிசேஷ யுகத்தில் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்றவர்களைக் குறிக்கிறது.பேழை கரை சேரும் வரை அவர்கள் ஐந்து மாதங்கள் பேழையில் தங்கினார்கள். இது வெள்ள அனுபவத்தின் முடிவு காலத்தின் தொடக்கத்தைக் குறிக்கும். பேழைக்கு வெளியே, அவர்கள் எல்லா இடங்களிலும் இன்னும் தண்ணீரை மட்டுமே பார்த்தார்கள். அதேபோல நாம் இந்த யுகத்தின் முடிவில், மனுக்குலத்தின் மீதான



சாபம் இன்னும் செயலில் இருப்பதைப் பார்க்கிறோம். ஆனால் பேழை கரை சேர்ந்தவுடன், பேழைக்குள் இருந்தவர்கள் தாங்கள் முடிவடையும் கட்டத்தில் இருப்பதை உணர்ந்துகொண்டார்கள், விரைவில் விஷயங்கள் சரியாகிவிடும் என்று அறிந்து கொண்டார்கள்.

மத்தேயு13:39இல் இயேசு சொன்னது போல், இன்று நாம், சுவிசேஷ யுகத்தின் முடிவுக் காலத்தில், யுகத்தின் அறுவடையில் இருக்கிறோம். "அறுப்பு உலகத்தின் முடிவு, (*sunteleia*,)அறுக்கிறவர்கள் தேவதூதர்கள்." இந்தக் காலகட்டம் 1874இல், தானியேல் 12:12இன் 1335 ஆண்டுகளின் முடிவில் தொடங்கியது. சாபம் இன்னும் உலகில் காணப்படுகிறது. ஆனால் முடிவு வெகு சமீபத்தில் உள்ளது. ஜலப்பிரளயத்தின் போது, இன்னும் 74 நாட்கள் காத்திருந்த பிறகு, அவர்கள் மலையின் உச்சியைக் கண்டார்கள். பேழைக்குள் இருந்த அவர்களின் காலம் மிக சமீபமாக நெருங்கிவிட்டதற்கான முதல் அறிகுறியாக இருந்தது. (ஆதியாகமம் 8:4, 5) இந்த எண்ணிக்கை துல்லியமானது, ஏனெனில் ஒவ்வொரு மாதமும் சரியாக 30 நாட்கள் என்பது நாம் அறிந்ததே. (ஆதியாகமம் 7:11, 24, 8:3,4 ஒப்பிட்டு பார்க்கவும்) 1874ம் வருடத்தில் இருந்து 74 ஆண்டுகளை எண்ணினால், அது நம்மை 1948 ம் வருடம், இஸ்ரயேல் தேசத்தின் ஸ்தாபனத்துக்கு நம்மை அழைத்து வருகிறது. குறித்த நேரத்தில் இந்த பூமிக்குரிய இராஜ்யங்களில், கிறிஸ்துவின் இராஜ்யம் துவங்கும் விதத்திற்கு இதுவே முதல் காணக்கூடிய அறிகுறியாக இருந்தது.

நோவாவும் அவருடைய குடும்பத்தினரும் அடுத்த வருடம் முதல் நாள் வரை காத்திருந்தனர், அந்த நாளில் வெள்ளத்தின் தண்ணீர் போய்விட்டது. (ஆதியாகமம் 8:13)அன்று வெள்ளம் கரைபுரண்டு ஓடுவதைக் கண்டார்கள். புதிய ஆண்டில் முதல் நாள், சில சமயங்களில் கடவுளின் திட்டத்தில் ஒரு புதிய யுகத்தை குறிக்கலாம். (எடுத்துக்காட்டாக - யாத்திராகமம் 40:2) எனவே, பூமியில் ஆசீர்வதிக்கப்பட்ட கடவுளின் இராஜ்யத்தின் (காணக்கூடிய) துவக்கத்தில், சாபம் விலகும், ஜீவனை நோக்கி முன் செல்லும் காரியம் மிக விரைவில் இருக்கும். ஆனாலும் பேழையில் இருந்தவர்கள் இன்னும் பூமியில் இறங்கவில்லை. ஜலம் போய்விட்டாலும் - சாபம் நீங்கியதைக் குறிக்கும்



- நிலம் சேறும் சகதியுமாக இருந்தது. அதேபோல், இராஜ்யத்தின் துவக்கத்தில் சாபம் நீக்கப்படும் போது, பேழைக்குள் இருப்பவர்கள் இன்னும் பாதுகாப்பாக இருக்கவேண்டும். ஏனெனில் உள்ளுக்குள் இருக்கும் பாவத்தின் விளைவுகள் நீடித்துக்கொண்டே இருக்கும். சேறுள்ள நிலம் காய்ந்து போகும் வரை 56 நாட்கள் அவர்கள் பேழையில் தங்கியிருந்தனர். இது பாவத்தின் விளைவுகள் நீக்கப்படும் வரை தங்கியிருந்ததை குறிப்பிடுகிறது. பின்னர் கிறிஸ்துவின் பேழையைச் சார்ந்திருப்பதை விட்டு வெளியேறலாம். அவர்கள் முழுமையாக மீட்டெடுக்கப்படுவார்கள்.

56 நாட்கள், 7 x 8, மீகா 5:5இன் 7 இராஜாக்கள் மற்றும் 8 அதிபதிகளை நமக்கு நினைப்பூட்டுகிறது. அவர்கள் இராஜ்யத்தில் நித்திய ஜீவனுக்கு உலகை வழிநடத்துவார்கள்.

### தேசமாக இருக்கும் நிலை

எனவே, இஸ்ரயேல் இராஜ்யத்தின் முன்னோடியாக தேசத்தை அடைந்த ஆண்டு வேதத்தில் குறிக்கப்பட்டுள்ளது, இருப்பினும் குறித்த நேரம் வரும் வரை அது அறியப்படாது. இந்த நேரத்திற்கு மூன்றாவது குறிப்பும் இருக்கலாம்.

மேலே, தானியேல் **12:12**ன் 1335 ஆண்டுகளைக் குறிப்பிட்டோம். தானியேல் 12ம் அதிகாரத்தில் மூன்று கால தீர்க்கதரிசனங்கள் உள்ளது - 1260,1290 மற்றும் 1335 வருடங்கள். இவற்றில் முதன்மையானது தானியேலில் இரண்டு முறையும், வெளிப்படுத்துதலில் ஐந்து முறையும், மொத்தம் ஏழு முறை தீர்க்கதரிசனத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது.பிந்தைய இரண்டு தீர்க்கதரிசனங்கள் ஒவ்வொன்றும் ஒரு முறை மட்டுமே குறிப்பிடப்படுகின்றன. எனவே அவை குறைவான முக்கியத்துவம் வாய்ந்தவை அல்ல, ஆனால் அந்த தீர்க்கதரிசனங்களின் நேரத்தை எண்ணுவது முந்தையதை அடிப்படையாகக் கொண்டது, எனவே அவை மீண்டும் மீண்டும் குறிப்பிடப்படுவதற்கு அவசியமில்லை.

இந்த தீர்க்கதரிசனங்களால் சுட்டிக்காட்டப்பட்ட தேதிகள் 1799, 1829 மற்றும் 1874 ஆகும். இவை அனைத்தும் ஆவிக்குரிய இஸ்ரயேலைப் பற்றிய விஷயங்களைப் பற்றியது.

(1)1799 கிறிஸ்தவமண்டலத்தில் போப்பமைப்பின் துன்புறுத்தும் அதிகாரத்தின் முடிவைக் குறிக்கிறது.


(2)1829 அறுவடையின் நேரம் நெருங்கி வருவதால், தானியேல் தீர்க்கதரிசனங்கள் நன்றாகப் புரிந்துகொள்ளத் தொடங்கியது.

(3)1874 அறுவடையானது கிறிஸ்துவின் வருகையுடன் தொடங்கியது.

இந்த தேதிகள் ஒவ்வொன்றும் தானியேல் **11:31**இல் விவரிக்கப்பட்டுள்ள குறிப்பினால் தொடங்குகின்றது. இது "பாழாக்குகிற அருவருப்பை" ஸ்தாபிப்பதைப் பற்றி பேசுகிறது. இந்த கால தீர்க்கதரிசனங்கள் தொடங்குவதற்கான நேரம் இது என்பதை நாம் அறிவோம். ஏனெனில் "அன்றாட பலி நீக்கப்பட்டு, பாழாக்கும் அருவருப்பு ஸ்தாபிக்கப்படுங்காலமுதல் ஆயிரத்திருநூற்றுத் தொண்ணூறுநாள் செல்லும் "என்று தானியேல் 12:11 கூறுகிறது. அதை தொடர்ந்து கடைசி இரண்டு தீர்க்கதரிசனங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. போப் அமைப்பு ஆவிக்குரிய மேலாதிக்கமாக கிறிஸ்தவ உலகத்தை ஆளுவதற்கு அங்கீகாரம் பெற்றபோது, தானியேல் சொன்ன "பாழாக்கும் அருவருப்பானது" ஸ்தாபிக்கப்பட்டது. கிபி 533இல், பேரரசர் ஜஸ்டினியன், ரோம பிஷப், இனி கிறிஸ்தவ சபைகளின் தலைவராக இருப்பார் என்று கூறினார். இருப்பினும், அந்த நேரத்தில், ரோம் ஆஸ்டரோகோத்ஸால் ஆளப்பட்டது, அவர்கள் வற்புறுத்தலில் ஆரியன், ஜஸ்டினியன் வழங்கிய அதிகாரத்தை மதிக்கவில்லை. அதைத் தொடர்ந்து, ஜஸ்டினியனின் ஜெனரல் பெலிசாரிஸ் ரோமுக்குள் நுழைந்து, பின்னர் கோத்ஸ் நகரத்தை முற்றுகையிட்டனர். இந்த முற்றுகை கிபி 538 ல் நீக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து அன்றைய இத்தாலியின் தலைநகரான ரவென்னா, கிபி 539இல் பெலிசாரியஸால் கைப்பற்றப்பட்டது. பின்னர் இந்த வெற்றியைத் தொடர்ந்து, பெலிசாரியஸ் கான்ஸ்டான்டிநோப்பிளுக்குத் திரும்பினார், அங்கு அவருக்கு பெரும் மரியாதை வழங்கப்பட்டது -இத்தாலியின் "ஆவிக்குரிய" கட்டுப்பாடு ரோம் பிஷப்புக்கு கொடுக்கப்பட்டது.

## மாம்ச இஸ்ரயேலர்

அதுவே தானியேல் **11:31** மற்றும் அதற்குப் பிந்தைய காலக் கணிப்புகளின் அடிப்படைப் பொருளாகும். ஆவிக்குரிய "இஸ்ரயேலாகிய" கிறிஸ்தவ மண்டலத்திற்கு தொடர்பானவை. ஆனால் சில சமயங்களில் வசனங்களின் அர்த்தத்திற்கு பல பரிமாணங்கள் உள்ளது. பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்கள் பல பயன்பாடுகளைக் கொண்டிருக்கும் போது, சில குறுகிய காலத்திற்காகவும் மற்றும் சில தொலைதூர



எதிர்காலத்திற்கானவைகளாகவும் இருக்கிறது. அதேபோல மாம்ச இஸ்ரயேல் மற்றும் அவற்றின் பிற்கால மறுசீரமைப்புக்கு தொடர்பான இந்த கால தீர்க்கதரிசனங்களின் இணையான பயன்பாடும் இருக்கலாம் அல்லவா?

நீண்ட காலத்திற்கு முன்பு, மலையில் கட்டப்பட்ட இஸ்ரயேலின் ஆலயத்தில் ஒரு "அருவருப்பு" பற்றிய அவதானிப்பின் காரணமாக இந்த பரிந்துரை எழுதப்படுகிறது. அதாவது " Dome of the Rock " இன்று வரை இது எருசலேமைப்பற்றிய குறிப்பிடத்தக்க அடையாளமாக உள்ளது. ஆனால் ஒவ்வொரு யூத மற்றும் கிறிஸ்தவ விசுவாசியும் அதை வெளிப்படுத்துவது பொருத்தமற்றது என்று அங்கீகரிக்கிறது.

இந்த " Dome of the Rock ", கிறிஸ்துவை அடையாளப்படுத்தும் ஈசாக்கின் பலியை மதிப்பதற்காக அல்ல, அதற்கு பதிலாக இஸ்லாமியர்களால் அடையாளம் காணப்பட்ட இஸ்மயேலின் பலியை கௌரவிப்பதற்காக கட்டப்பட்டது. ஈசாக்கின் நினைவை மாற்றுவதினால், ஈசாக்கின் பலியை முன்னறிவித்த இயேசுவின் பலிக்கு இது ஒரு அவமானமாக இருந்தது.

பூசை பலியைப் பற்றி போப் அமைப்பின் உபதேசம், ஒரு முறை உலகத்தை மீட்பதற்காக கொடுக்கப்பட்ட இயேசுவின் பலிக்கு விரோதமான அருவருப்பாக கருதப்பட்டால், இயேசுவின் சிறப்பான பலியை சித்தரிக்கும் போது அதை ஒரு போலியான மற்றும் பொய்யான பலியை செலுத்துவதாக கருதலாம்.

"Dome of the Rock" கட்டப்பட்ட ஆண்டு சில நிச்சயமற்ற நிலைக்கு உட்பட்டது. ஆனால் இது 688 ஆம் (Wikipedia). ஆண்டில் தொடங்கப்பட்ட 1400 களில் அல் - சுயூட்டியால் (al-Suyuti) வழங்கப்பட்டது.1260 ஆண்டுகால எதிர்காலத்தைக் கணக்கிட்டால்,இஸ்ரயேல் ஒரு சுதந்திர தேசமாக மறுசீரமைக்கப்பட்ட 1948 ம் வருடம் வருகிறது. மற்றொரு 30 ஆண்டுகள், 1290 ஆண்டுகள் முடிவில் நம்மை 1978க்கு அழைத்துச் செல்கிறது. இது கேம்ப் டேவிட் உடன்படிக்கையின் ஆண்டு, இதன் விளைவாக எகிப்துடன் சமாதானம், பின்னர் ஜோர்டானுடன் சமாதானம், மற்றும் ஆண்டுகள் கடந்து, ஆபிரகாம் உடன்படிக்கைகள், இதில் அதிகமான அரபு நாடுகள் உள்ளது. இஸ்ரயேலுக்கு எதிராக மூன்று போர்கள் நடந்துள்ளது, அதில் அருகிலுள்ள அரபு நாடுகள் இஸ்ரயேலின் புதிய அரசை அகற்ற முயன்றன. அவை 1948,1967 மற்றும் 1973 ஆண்டுகளில் நடந்தது. அதன்பிறகு இது போன்ற மற்றொரு படையெடுப்பு நடந்ததில்லை. எசேக்கியேல் 38 இன் இறுதிப் படையெடுப்பு வரும்போது, இஸ்ரயேலுடன் சமாதானம் செய்த கொண்ட அரபு நாடுகள் இதில் ஈடுபடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஒருவேளை ஒரு சமாதானமாக அமைதி, இருந்தாலும், இஸ்ரயேலுக்கும் அதன் அண்டை அரபு நாடுகளுக்கும் இடையே ஒருபோதும் சமாதானம் இருக்கவில்லை. மற்றொரு 45 ஆண்டுகள், 1335 ஆண்டுகளின் முடிவில், நம்மை 2023க்கு அழைத்துச் செல்கிறது - காசா மோதலின் ஆண்டு, இது ஒரு புதிய பிரச்சனையைத் துவங்கியது. அதவாது, இஸ்ரயேலின் கடவுள் கொடுத்த பாரம்பரியத்தின் ஒரு பகுதியாக கடவுள் உறுதிப்படுத்தியதை இஸ்ரயேல் மீட்டெடுத்தது. ஆதியாகமம் 13:14மற்றும் 15:18-21போன்ற நிலத்தின் விரிவான விளக்கத்தில் காசா பகுதி இஸ்ரயேலுக்குச் சொந்தமானது என்பது தெளிவாகத் தெரிகிறது. இன்னும் குறிப்பாக, யோசுவா வாக்குறுதியின் தேசத்தின் பெரும்பகுதியைக் கைப்பற்றிய பிறகு, ஒரு தேவதூதன் மூலம், கடவுள் யோசுவாவிடம் எஞ்சியிருப்பதைப் பற்றி பேசினார். "யோசுவா வயதுசென்று முதிர்ந்தவனானபோது, கர்த்தர் அவனை நோக்கி - ... மீதியாயிருக்கிற தேசம் எவையெனில்,...காசா, அஸ்தோத், அஸ்கலோன், காத், எக்ரோன் என்கிற பட்டணங்களிலிருக்கிற பெலிஸ்தருடைய ஐந்து அதிபதிகளின் நாடும்... " (யோசுவா 13:1-3)

பெலிஸ்தியர்கள் பல தலைமுறைகளாக இஸ்ரயேலின் பக்கத்தில் முள்ளாக இருந்தார்கள். சகரியா 9ம் அதிகாரம் இந்த ஜனங்களைப் பற்றி பேசுகிறது, அவர்கள் வெளியேற்றப்படுவார்கள் மற்றும் ஜனங்கள் சிதறடிக்கப்படுவார்கள், அதனால் அவர்கள் இனி அங்கீகரிக்கப்பட்ட ஜனங்களாகத்

தொடர மாட்டார்கள் என்பதை உறுதிப்படுத்துகிறது. எஞ்சியவர்கள் இஸ்ரயேலர்களிடையே ஒருங்கிணைக்கப்படுவார்கள். இந்த தீர்க்கதரிசனம் அலெக்சாண்டர் தி கிரேட்டின் பிரச்சாரத்தின் போது நிறைவேறியது. அவரது வெற்றிக்குப் பிறகு, பெலிஸ்தியர்கள் அடையாளம் காணப்படவில்லை. (சகரியா 9ம் அதிகாரத்தின் துவக்க வசனங்களின் பல்வேறு விமர்சனங்களை பார்க்கவும்.)

பார் கோச்பா கிளர்ச்சியைத் தொடர்ந்து ரோமானியப் பேரரசர் ஹட்ரியனின் காலத்தில், ரோமானியர்கள் அந்த நிலத்தை "இஸ்ரயேல்" என்று குறிப்பிடாமல் "பாலஸ்தீனம்" என்று குறிப்பிட்டனர், அவர்கள் தென்மேற்கில் முன்னாள் ஆக்கிரமிப்பாளர்களாக இருந்த பெலிஸ்தியர்களின் பெயரிலிருந்து வந்துள்ளனர். {பாலஸ்தீனம் என்ற சொல் ஜோசபஸின் காலத்திலோ அல்லது அதற்கு முந்தைய காலத்திலோ பயன்படுத்தப்பட்டதாக சில ஆதாரங்கள் குறிப்பிடுகின்றன. ரோம் பயன்படுத்திய "சிரியா பாலஸ்தீனா" என்ற வெளிப்பாடு இழிவாக பயன்படுத்தப் படவில்லை. மாறாக நிலத்தின் வடக்கு மற்றும் தெற்கு எல்லைகளை அடையாளம் காண பயன்படுத்தப்பட்டது.}இன்று பாலஸ்தீனியர்கள் என்று தவறாகக் குறிப்பிடப்படும் ஜனங்கள் அரேபியர்கள் அல்லது எகிப்தியர்கள் என இரண்டு மூலங்களிலிருந்து வந்தவர்கள். அவர்கள் பல நூற்றாண்டுகளுக்கு முந்தைய பூர்வீக குடிமக்கள் அல்ல.

சர்ச்சைக்குரிய மற்றொரு இடம் மேற்குக் கரை என்று அழைக்கப்படுகிறது. எந்த வரைபடமும் காட்டுவது போல, இது இஸ்ரயேலின் மையப்பகுதியின் ஒரு இடமாகும். சந்தேகத்திற்கு இடமின்றி இது வாக்களிக்கப்பட்ட தேசத்தின் ஒரு




பகுதியாகும். இந்த இரண்டு இடங்களிலும் - காசா மற்றும் மேற்குக் கரையில் - தற்போதைய சர்ச்சைக்குரிய பகுதிகள் உள்ளது. அக்டோபர் 7, 2023 இல் நடந்த எதிர்பாராத வன்முறை, வாக்குறுதியளிக்கப்பட்ட தேசத்தின் இந்த பகுதிகளை இஸ்ரயேல் பெற்றுகொள்ள இது நீண்ட செயல்முறைக்கு தூண்டுதலாக இருந்திருக்கலாம். எனவே இந்த மூன்று தேதிகள் - 1948, 1978, 2023 - இராஜ்யத்திற்கான இஸ்ரயேல் ஆயத்தத்தின் மூன்று முக்கிய கட்டங்களைக் குறிக்கும் நோக்கமாக இருக்கலாம். (1) அவர்களின் சுதந்திர தேசம் திரும்புதல், (2) சுற்றியுள்ள அரபு நாடுகளுடனான ஆயுத மோதலின் முடிவு மற்றும் (3) இஸ்ரயேலருக்கு கடவுளால் தெளிவாகப் பகிர்ந்தளிக்கப்பட்ட நிலத்தின் மறுசீரமைப்பு

## இறுதி மோதல்

# எசேக்கியேல் 38



"...மேசேக் தூபால் ஜாதிகளின் தலைமையான அதிபதியாகிய மாகோகு தேசத்தானான கோகுக்கு எதிராக நீ உன் முகத்தைத் திருப்பி, அவனுக்கு விரோதமாகத் தீர்க்கதரிசனம் உரைத்து...பெர்சியரும், எத்தியோப்பியரும், லீபியரும் இருப்பார்கள்...கோமேரும்....திரளான ஜனங்கள் உன்னுடனேகூட இருப்பார்கள்."(எசேக்கியேல் *38:1-6*)

யோயாக்கீனின் மூன்று மாத ஆட்சியின் முடிவில் நிகழ்ந்த சிறையிருப்பின் போது இஸ்ரயேலனாகிய எசேக்கியேல் பாபிலோனுக்கு சிறைப் பிடிக்கப்பட்டு போனார். எசேக்கியேலின் முதல் தீர்க்கதரிசனம் சிறைபிடிக்கப்பட்ட ஐந்தாம் ஆண்டில் தொடங்கியது. (எசேக்கியேல் 1:2) எசேக்கியேலின் முதல் ஏழு அதிகாரங்கள் அந்த வருடத்தின் காரியங்களும், எட்டாவது அதிகாரத்தில் அடுத்து வரும் ஆறாம் ஆண்டின் காரியங்களும் பதிவு செய்யப்பட்டன. (எசேக்கியலே் 8:1) எசேக்கியேல் 20:1 சிறைபிடிக்கப்பட்ட ஏழாவது ஆண்டில் தொடங்குகிறது. அந்த அதிகாரங்களில் முதல் பாதி, இஸ்ரயேலின் சீர்கெட்ட வழிகளைப் பற்றி விவாதிக்கிறது.

24ம் அதிகாரம் நம்மை ஒன்பதாம் வருடத்திற்கு அழைத்து செல்கிறது. அப்போது யூதாவின் கடைசி இராஜாவாகிய சிதேக்கியா பாபிலோனுக்கு அடிபணிவதாக அளித்த வாக்குறுதிகளை மீறினதால்,நேபுகாத்நேச்சார் அவருக்கு எதிராக தனது பிரச்சாரத்தை தொடங்கிய ஒன்பதாம் ஆண்டிற்கு 24ம் அதிகாரம் நம்மை அழைத்துச் செல்கிறது. அதன்பிறகு 25ம் அதிகாரத்திலிருந்து, எசேக்கியேலின் தீர்க்கதரிசனங்கள் மற்ற தேசங்கள் அதாவது பாபிலோன் உட்பட அனைத்திற்கும் எதிரானவைகளாக இருக்கிறது. எசேக்கியேல் 25:2 அம்மோனியர்களைப் பற்றி குறிப்பிடப்படுகிறது. எசேக்கியேல் 26:1ல் இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, தீருவைப் பற்றி குறிப்பிடுகிறது, இது எசேக்கியேல் 28 முதல் மூன்று அதிகாரங்கள் தொடர்கிறது. எசேக்கியேல் 29:2. எகிப்துக்கு எதிரான ஒரு தீர்க்கதரிசனம் தொடங்குகிறது. எசேக்கியேல் 30:4-6 ல் எகிப்தைப் பற்றியும், அதோடு கூட எத்தியோப்பியா, லிபியா மற்றும் லிடியாவை சேர்த்து, எகிப்துக்கு எதிராக, கடவுளின் செயலாண்மையாக இருக்கும் பாபிலோனின் நேபுகாத்நேச்சார் அவர்களுக்கு தீர்ப்பளிப்பார் என்று மீண்டும் குறிப்பிடுகிறது. (எசேக்கியேல் 30:10) 30, 31 மற்றும் 32ம் அதிகாரங்களில் எகிப்தும் அதன் அண்டை நாடுகளும் தொடர்ந்து பாடமாக இருந்தன. அசூர், ஏலாம்,மேஷேக், துபால், ஏதோம், சீதோன் ஆகிய நாடுகளைப் துபாய் போல் எகிப்தும் தாழ்த்தப்படும். (எசேக்கியேல் 32:22, 24, 26, 29, 30)

### மீண்டும் இஸ்ரயேல்

அதற்குபின், எசேக்ககியேல் 33ம் அதிகாரத்தில் தனது கவனத்தை இஸ்ரயேலுக்குத் திருப்புகிறார். எசேக்கியேல் 35இல் சேயீர் மலை சேர்க்கப்பட்டாலும், அதன் பிறகு இஸ்ரயேல் பாடமாக உள்ளது. "இஸ்ரயேல் புத்திரருடைய அக்கிரமம் நிறைவேறுகையில் அவர்களுக்கு உண்டான ஆபத்தின் காலத்தில் பட்டயத்தின் கூர்மையினால் அவர்களுடைய இரத்தத்தைச் சிந்தினபடியால்.." எனவே இது இஸ்ரயேலின் விஷயத்துடன் தொடர்புடையதாக உள்ளது. (எசேக்கியேல் 35:5)

பின்னர், எசேக்கியேல் 36இல் தொடங்கி, புத்தகத்தின் இறுதி வரை, எசேக்கியேலின் தீர்க்கதரிசனங்களில் சொல்லப்பட்ட, முந்தைய நியாயத்தீர்ப்புகள் நிறைவேறின பிறகு,இஸ்ரயேலுக்கு வரும் ஆசீர்வாதத்தைப் பற்றியது. "இஸ்ரயேலின் மலைகளே, நீங்கள் உங்கள் கொப்புகளை விட்டு, என் ஜனமாகிய இஸ்ரயேலுக்கு உங்கள் கனிகளைக் கொடுப்பீர்கள்...இதோ, நான் உங்கள் பட்சத்திலிருந்து, உங்களைக் கண்ணோக்குவேன், நீங்கள் பண்படுத்தப்பட்டு விதைக்கப்படுவீர்கள். பட்டணங்கள் குடியேற்றப்படும், அவாந்தரமான ஸ்தலங்கள் கட்டப்படும். உங்கள்மேல் மனுஷரையும் மிருக ஜீவன்களையும் பெருகிப் பலுகும்படி வர்த்திக்கப்பண்ணுவேன், பூர்வநாட்களில் நீங்கள் இருந்த நிலைமையில் நான் உங்களை ஸ்தாபித்து, உங்கள் முந்தின சீரைப்பார்க்கிலும் உங்களுக்கு நற்சீர் உண்டாகச்செய்வேன், அதினால் நான் கர்த்தர் என்று அறிந்து கொள்வீர்கள்." (எசேக்கியேல் 36:8-11)

பாபிலோனிய சிறையிருப்பிற்குப் பிறகு, பெர்சியாவின் இராஜா கோரேஸ் இஸ்ரேயலை தங்கள் தேசத்திற்குத் திரும்ப விடுவித்தபோது இந்த ஆசீர்வாதம் இஸ்ரயேலுக்கு வழங்கப்பட்டது. இருப்பினும், இதை விட பெரிய நிஜம்,இந்த தீர்க்கதரிசனங்களில் உள்ளது. ரோமானிய புலம்பெயர்ந்தோரிலிருந்து இஸ்ரயேல் திரும்பும் போது பெற்ற ஆசீர்வாதம் இன்னும் அற்புதமானவை.இஸ்ரயேலின் முழுமையான மற்றும்

மகத்தான மறுசீரமைப்பு நிகழும் அந்த நேரத்தில் நாம் இன்று வாழ்ந்துக் கொண்டிருக்கிறோம்.

**எசேக்கியேல் 37**



எசேக்கியேல் 37 இஸ்ரயேலின் மறுசீரமைப்பைப் பற்றிய ஒரு பிரபலமான அதிகாரமாகும், இது நவீன காலங்களில் ஒரு அற்புதமான நிறைவேற்றத்தைக் கொண்டுள்ளது. பள்ளத்தாக்கில் சிதறிக்கிடந்த எலும்புகள், "திறந்த பள்ளத்தாக்கில்.... மிகவும் உலர்ந்ததாக இருந்தது", இது ஒருங்கிணைந்த நாடாக இருந்த இஸ்ரயேல் கலைக்கப்பட்டதைக் குறிக்கிறது. பின்னர் இஸ்ரயேலின் மீட்பின் நான்கு நிலைகளைப் பின்பற்றவும் எலும்புகள் மீண்டும் இணைக்கப் படுகின்றன, எலும்புகள் மீது நரம்புகள் வந்து, தசைகள் அதை மூடி, கடைசியாக சரீரத்தின் மறுசீரமைப்பை முடிக்க தோல் தோன்றும். இன்னும் ஒரு காரியம் மீதியுள்ளது - அதில் ஜீவனும் இல்லை, விசுவாசத்தின் சுவாசமும் இல்லை. அது நான்கு காற்றுகளில் இருந்து வரும். "(7) எனக்குக் கட்டளையிட்டபடியே நான் தீர்க்கதரிசனம் உரைத்தேன், நான் தீர்க்கதரிசனம் உரைத்தேன், நான் தீர்க்கதரிசனம் உரைக்கையில் ஒரு இரைச்சல் உண்டாயிற்று, இதோ அசைவுண்டாகி, ஒவ்வொரு எலும்பும் தன்தன் எலும்போடே சேர்ந்துகொண்டது. (8) நான் பார்த்துக்கொண்டிருக்கையில்,இதோ, அவைகள் மேல் நரம்புகளும் மாம்சமும் உண்டாயிற்று, மேற்புறமெங்கும் தோலினால் மூடப்பட்டது, ஆனாலும் அவைகளில் ஆவி இல்லாதிருந்தது.(9) அப்பொழுது அவர் என்னைப்பார்த்து - நீஆவியை நோக்கித் தீர்க்கதரிசனம் உரை - மனுபுத்திரனே, நீ தீர்க்கதரிசனம் உரைத்து, ஆவியை நோக்கி - தீர்க்கதரிசனம் உரை, மனுபுத்திரனே, நீ (தீர்க்கதரிசனம் உரைத்து, ஆவியை நோக்கி) - கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறது என்னவென்றால், ஆவியே, நீ காற்றுத்திசை நான்கிலுமிருந்துவந்து கொலையுண்ட இவர்கள் உயிரடையும்படிக்கு இவர்கள்மேல் ஊது என்கிறார்



என்று சொல் என்றார். (எசேக்கியேல் 37:7-9)

எலும்புகள், நரம்புகள், தசைகள்,தோல் - மீட்பின் இந்த தரிசனத்தில் நான்கு படிகளைக் கவனிக்கலாம்.

1878 முதல், இஸ்ரயேலின் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நிலத்தை மீட்க குடியமர்த்தத் தொடங்கியபோது, ஒரு தேசமாக அவர்களின் மறுசீரமைப்பை நான்கு காரியங்கள் குறிக்கிறது. (1) 1878 ஆம் ஆண்டு பெர்லின் காங்கிரஸ் ஆஃப் நேஷன்ஸ் ஒட்டோமான் பேரரசின் குடிமக்கள் சட்டத்தை சமமாகப் பயன்படுத்த அனுமதித்தது, இதனால் யூத குடிமக்கள் நிலம் வாங்கி அங்கு குடியேறுவதற்கான வாய்ப்பை அனுமதித்தது. (2) முதல் சியோனிஸ்ட காங்கிரஸ் 1897 இல் தியோடர் ஹெர்சல் தலைமையில் கூடியது. (3)1917 ஆம் ஆண்டின் பால்ஃபோர் பிரகடன், ஒட்டோமான்களிடமிருந்து இஸ்ரயேலை சமீபத்தில் கட்டுப்பட்டிற்குள் கொண்டுவந்த இங்கிலாந்து. அந்த நிலத்தை யூத மக்களுக்கு ஒரு தேசிய தாயகமாக மாற்ற விரும்புவதாக உறுதிப்படுத்தியது. (4)1948 மே மாதம் இஸ்ரயேலுக்கு தேசிய சுதந்திரம் கிடைத்தது.

ஜீவனுள்ள விசுவாசத்தின் சுவாசம் இன்னும் இல்லை. இஸ்ரயேலின் விசுவாசத்தின் கட்டமைப்பு மேம்பட்டு வருவதாகத் தெரிகிறது. டேவிட் பென் குரியன் தன்னை கடவுள் நம்பிக்கை கொண்டவராகக் கருதினாலும், ஆரம்பகால அரசாங்கங்கள் நிச்சயமாக மதம் சார்ந்ததாக இருக்கவில்லை. இன்று அரசாங்கத்தின் கடவுள் நம்பிக்கையை வெளிப்படுத்தும் தலைவர்கள் அதிகமாக உள்ளனர். தேசிய அளவில், முழு இஸ்ரயேலும் "தாங்கள் குத்தினவரை பார்த்து" மேசியாவை முழுமையாக ஏற்றுக்கொள்ளும் போது

விசுவாசத்தின் உண்மையான மறுமலர்ச்சி ஏற்படும். நாம் இதற்காக ஆவலோடு காத்திருக்கிறோம். (சகரியா12:10)

பரிசுத்தவான்கள் நெற்றிகளில் முத்திரை போட்டு தீரும் வரை, வெளிப்படுத்துதல் 7:1-3இன் "நான்கு காற்றுகள்" பிடிக்கப் பட்டிருக்கின்றன. இது சில நேரங்களில் பலவிதமாக விளக்கப்படுகிறது. இது பரிசுத்தவான்கள் நிறைவடையும் நேரத்தைக் குறிக்கிறது மற்றும், அறுவடையின் முடிவில், வரும் மகா உபத்திரவ காலத்தின் அடையாளமான சுழல் காற்றில் மகிமை அடைவதற்கு ஆயத்தமாக இருக்கும் எலியா வகுப்பார் அடையாளப்படுத்துகிறது. எவ்வாறாயினும், இஸ்ரயேலை பொறுத்தவரை, நான்கு தேசிய போர் காற்றுகள் உள்ளது, அவை முழு விசுவாசத்தை திரும்ப கொண்டு வரும் - 1948, 1967, 1973 மற்றும் எசேக்கியேல் 39ன் காலம்.

## அசீரியாவின் நான்கு போர்கள்

முந்தைய கட்டுரையில், எசேக்கியாவின் நாட்களில், அசீரிய இராஜா சனகெரிப்பிடமிருந்து இஸ்ரயேல் விடுவித்தது, இஸ்ரயேலின் இறுதி விடுதலையின் அடையாளமாக, இன்னும் நிலுவையில் உள்ளது என்று குறிப்பிடப்பட்டது. இஸ்ரயேலுடன் மோதலில் ஈடுபட்ட அசீரியாவின் நான்கு இராஜாக்களைப் பற்றி வேதம் குறிப்பிடுவது, அதில் நான்காவது மற்றும் கடைசி இராஜா சனகெரிப் என்பது சுவாரஸ்யமானது. திக்லத்பிலேசர், சல்மனேசர், சர்கோன், சனகெரிப் ஆகிய நான்கு இராஜாக்கள் ஆவர்.

இந்த நான்கு இராஜாக்களும் இஸ்ரயேலுக்கு எதிராக செய்த முயற்சிகளை, யோயேல் தீர்க்கதரிசியால் குறிப்பிடப்படுகிறது. இது இஸ்ரயேல் முழுவதும் ஊடுருவி தாக்கும் நான்கு விதமான பூச்சிகளுக்கு ஒப்பிடப்படுகின்றது. "பச்சைப்புழு விட்டதை வெட்டுக்கிளி தின்றது, வெட்டுக்கிளி விட்டதைப் பச்சைக்கிளி தின்றது, பச்சைக்கிளி விட்டதை முசுக்கட்டைப்பூச்சி தின்றது."(யோயேல் 1:4) இதே காரியம் மீண்டும் யோயேல் 2:25ல் சொல்லப்பட்டுள்ளது. "நான் உங்களிடத்தில் அனுப்பின என் பெரிய சேனையாகிய வெட்டுக்கிளிகளும், பச்சைக்கிளிகளும், முசுக்கட்டைப் பூச்சிகளும், பச்சைப் புழுக்களும் பட்சித்த வருஷங்களின் விளைவை உங்களுக்குத் திரும்ப அளிப்பேன்."

நான்காவது போரானது சனகெரிப்பால் நிறைவேற்றப்பட்டது, அதில் இருந்து கடவுள், இஸ்ரயேலை ஒரு அற்புதத்தின் மூலம் விடுவித்தார். அதற்கு பின் இஸ்ரயேல் விடுதலைப் பெற்றது ஆனால், அதற்கு அவர்கள் போராட வேண்டிய அவசியமில்லாதிருந்தது.

## எசேக்கியேல் 38




இஸ்ரயேலின் இறுதிப் படையெடுப்பு, அதிலிருந்து கடவுள் அவர்களை விடுவித்த காரியம், அறுவடையின் முடிவில், இராஜ்யத்தின் அறிமுகத்தின் முடிவில் நிகழக்கூடியதாக உள்ளது. எசேக்கியேல் 38:2 -"மனுபுத்திரனே, மேசேக் தூபால் ஜாதிகளின் தலைமையான அதிபதியாகிய மாகோகு தேசத்தானான கோகுக்கு எதிராக நீ உன் முகத்தைத் திருப்பி, அவனுக்கு விரோதமாகத் தீர்க்கதரிசனம் உரைத்து, (3) சொல்லவேண்டியது என்னவென்றால் - கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார், மேசேக் தூபால் ஜாதிகளின் அதிபதியாகிய கோகே. இதோ, நான் உனக்கு விரோதமாக வருவேன்.(4) நான் உன்னைத் திருப்பி, உன் வாயில் துறடுகளைப் போட்டு, உன்னையும் உன்னுடைய எல்லாச் சேனையையும், குதிரைகளையும், சர்வாயுதந்தரித்த குதிரைவீரர்களையும், பரிசையும் கேடகமுமுடைய திரளான கூட்டத்தையும் புறப்படப்பண்ணுவேன், அவர்கள் எல்லாரும் பட்டயங்களைப் பிடித்திருப்பார்கள். (5) அவர்களோடேகூடப் பெர்சியரும், எத்தியோப்பியரும், லீபியரும் இருப்பார்கள், அவர்களெல்லாரும் கேடகம் பிடித்து, தலைச்சீராவுந் தரித்திருப்பவர்கள். (6) கோமேரும் அவனுடைய எல்லா இராணுவங்களுமாகிய, வடதிசையிலுள்ள தொகர்மா வம்சத்தாரும் அவர்களுடைய எல்லா இராணுவங்களுமாகிய திரளான ஜனங்கள் உன்னுடனேகூட இருப்பார்கள்."

இஸ்ரயேலுக்கு எதிரான ஆறு எதிரிகளின் பெயர்கள், எதிரியின் தீய செயலுக்கு பொருத்தமான எண்ணாகும். கோகு பொதுவாக ரஷ்யாவாக அடையாளம் காணப்படுகிறது. இது 15ம் வசனம் கூறுகிறது. "அப்பொழுது நீயும் உன்னுடனேகூடத் திரளான ஜனங்களும் வடதிசையிலுள்ள உன்

ஸ்தானத்திலிருந்து வருவீர்கள், அவர்கள் பெரிய கூட்டமும் திரளான சேனையுமாயிருந்து...."

ஒருவேளை மேஷேக் மாஸ்கோவிற்கும், துபால் டோபோல்ஸ்க் Tobolsk. நதிக்கும் ஒரு இணையாக இருக்கலாம். இது ஒரு வியாக்கியானம். இந்த இணைப்பு அர்த்தமுள்ளதாக இருந்தால், கோகு ரஷ்யாவுடன் இணைக்கப்படுவதை ஆதரிக்கும். பெர்சியா இன்று இருக்கும் ஈரான். எத்தியோப்பியாவுக்கான ஹீப்ரு வார்த்தை கூஷ் ஆகும், மேலும் இது ஏமனைக் குறிக்கிறது, அங்கு ஈரானுடன் இணைந்த ஹெளதி கிளர்ச்சியாளர்கள் இன்னும் இஸ்ரயேலுக்கு விரோதமான சம்பவங்களில் ஈடுபட்டுள்ளனர். கடாபியின் வீழ்ச்சிக்குப் பின்னர் லிபியா சீர் குலைந்துள்ளது, ஆனால் இஸ்ரயேலுக்கு நட்பு இல்லாத இஸ்லாமிய வல்லமைகளால் ஆளப்படுகிறது. கோமர் ஜெர்மனியுடன் இணைப்பட்டிருக்கலாம், இது மேற்கு ஐரோப்பாவின் நடைமுறைத் தலைவராக உள்ளது.

வலுசர்ப்பம் (அரசியல்), மிருகம் (போப்பமைப்பு) மற்றும் கள்ள தீர்க்கதரிசி (மதம்) ஆகியவற்றின் கூட்டணியில் பழைய கிறிஸ்தவ மண்டலம் சேர்க்கப்பட்டுள்ளதால், இந்த இணைப்பு சாத்தியமாகத் தெரிகிறது. ஏனெனில், "...அவைகள் பூலோகமெங்குமுள்ள இராஜாக்களைச் சர்வவல்லமையுள்ள தேவனுடைய மகாநாளில் நடக்கும் யுத்தத்திற்குக் கூட்டிச் சேர்க்கும்படிக்குப் புறப்பட்டுப் போகிறது...எபிரெயு பாஷையிலே அர்மகெதோன் என்னப்பட்ட இடத்திலே அவர்களைக் கூட்டிச் சேர்த்தான்.." (வெளி 16:13-16) கூடுதலாக, வெளிப்படுத்துதல் 14:20 ல் திராட்சை ஆலையைப் பற்றி பேசுகிறது, அங்கு "பூமியின் திராட்சை செடியாகிய" கிறிஸ்தவ மண்டலம், "நகரத்திற்குப் புறம்பேயுள்ள அந்த ஆலையில்" தோல்வியைச் சந்திக்கிறது என்று வெளிப்படுத்தல் 14:20 கூறுகிறது. கிறிஸ்தவ மண்டலத்திற்கு வெளியே கிறிஸ்தவமண்டலத்தை எவ்வாறு மிதிக்க முடியும் ? ஒருவேளை அதன் கடைசி மோதலில் இஸ்ரயேலுடன் கூடியிருக்கலாம். இது யோயேல் 3:2,11-16 உடன் ஒத்துபோகிறது. அங்கு தேசங்கள் "யோசபாத்தின் பள்ளத்தாக்கில்" கூடி வருவதை நமக்கு நினைப்பூட்டுகிறது. அங்கு, "ஆலை நிரம்பியிருக்கிறது, ஆலையின் தொட்டிகள் வழிந்தோடுகிறது" - ஆலை மிதிக்கப்படுகிறது.

மேற்கு ஐரோப்பா இந்த கூட்டணியில் ஈடுபட்டிருந்தால், அது தோன்றுவது போல், இது உருவாக நேரம் எடுக்கும். தற்போது ஜெர்மனி ரஷ்யாவுடன் உக்ரைன் விஷயத்தில் முரண்படுகிறது. அந்த ஏற்றத்தாழ்வு தீர்க்க நேரம் எடுக்கும். தொகர்மா பெரும்பாலும் துருக்கியுடன் இணைக்கப்பட்டுள்ளது. சமீபத்திய தசாப்தங்களில் துருக்கி இஸ்ரயேலுடன் நட்புறவு குறைவாக இருப்பதால், நேட்டோ NATO மூலம் ஜெர்மனியுடன் இணைக்கப்பட்டிருப்பதாக நமக்குத் தெரிகிறது. தொகர்மா சீனாவுடன் இணையலாம் என்பது சமீப காலங்களில் ஒரு ஆலோசனை. இது நமக்கு குறைவாகவே தெரிகிறது. இருப்பினும், அந்த இணைப்பு நோக்கமாக இருந்தால், அது இஸ்ரயேலுக்கு எதிரான கூட்டணியின் வல்லமைக்கு துணைபுரியும்.

**மறுபக்கம்**

எசேக்கியேல் 38:13 தாக்குபவர்களுக்கு சாதகமாக இல்லாத மற்றொரு கூட்டணியைப் பற்றி பேசுகிறது. "சேபா தேசத்தாரும், தேதான் தேசத்தாரும், தர்ஷீசின் வர்த்தகரும் அதினுடைய பாலசிங்கங்களான அனைவரும் உன்னை நோக்கி - நீ கொள்ளையிட அல்லவோ வருகிறாயென்றும், நீ சூறையாடி, வெள்ளியையும் பொன்னையும் ஆஸ்தியையும் எடுத்துக்கொள்ளுகிறதற்கும், ஆடுகளையும் மாடுகளையும் பிடிக்கிறதற்கும், மிகவும் கொள்ளையிடுகிறதற்கும் அல்லவோ உன்னுடைய கூட்டத்தைக் கூட்டினாயென்றும் சொல்லுவார்கள்." (எசேக்கியேல் 38:13) எதிர்ப்பு தெரிவிப்பதைத் தவிர, இந்த நாடுகள் தலையிடுவதற்கான எந்த அறிகுறியும் இல்லை. நம்முடைய பரிந்துரைகள் - ஷேபாவும் டேடானும் சவூதி அரெமியாவுடன் இணைகிறது. இது ஈரானுடன் அனுதாபம் காட்டவில்லை. தர்ஷிஷ் ஒருவேளை இங்கிலாந்து, பழைய பிரிட்டிஷ் சிங்கம் ஆக இருந்தால், அவளுடைய சந்ததியாகிய "இளம் சிங்கங்கள்" ஒருவேளை கனடா, அமெரிக்க மற்றும் ஆஸ்திரேலியாவாக இருக்கலாம். இது சரியாக இருந்தால், 2016இல் பிரெக்சிட் Brexit வாக்கெடுப்பின் மூலம் இங்கிலாந்து ஐரோப்பிய யூனியனிலிருந்து பிரிந்தது, 2020 இல்வெளியேறியது. வருடங்கள் என்னவென்பதை என்பதை நாம் பார்க்கலாம்.

## இன்றைய தீர்க்கதரிசனம்

# இஸ்ரயேலுக்கு எதிரான போராட்டங்கள்

"இதற்குப்பின்பு நான் சூரியனுக்குக்கீழே செய்யப்படும் கொடுமைகளையெல்லாம் சிந்தித்துப் பார்த்தேன்,இதோ, ஒடுக்கப்பட்டவர்களின் கண்ணீரைக் கண்டேன், அவர்களைத் தேற்றுவாரில்லை, ஒடுக்குகிறவர்கள் பட்சத்தில் பெலமிருந்தது, அப்படியிருந்தும் தேற்றுவாரில்லை." (பிரசங்கி 4:1)

அமெரிக்க அரசியலமைப்பின் முதல் திருத்தம் நம்பிக்கைகளின் சுதந்திர வெளிப்பாட்டைப் பாதுகாக்கிறது, ஒரு எதிர்ப்பு எப்போது, எங்கு, எப்படிச் செயல்படலாம் என்பதைக் கட்டுப்படுத்தும் உரிமை அரசாங்கத்திற்கு மட்டுமே வரையறுக்கப்பட்டுள்ளது. வரலாறு முழுவதும் அடக்கு முறைக்கு எதிராக அமெரிக்கர்கள் எதிர்ப்பு தெரிவித்து வந்தனர். பாஸ்டன் தேநீர் விருந்து டிசம்பர் 16, 1773 அன்று மாசசூசெட்ஸின் பாஸ்டனில் நடந்ததுபோது, பிரிட்டனின் "பிரதிநிதித்துவம் இல்லாத வரிவிதிப்பினால்" விரக்தியடைந்த தேசபக்தர்கள் இறக்குமதி செய்யப்பட்ட தேயிலை பெட்டிகளை துறைமுகத்தில் வீசினர். இந்த மீறல் செயல் அமெரிக்கர்கள் இனி வரிவிதிப்பு மற்றும் கொடுங்கோன்மைக்கு அமைதியாக அடிபணிய மாட்டார்கள் என்பதை நிரூபித்தது. அது சுதந்திரத்திற்காக போராட 13 காலணிகளை அணிதிரட்டியது. ஜார்ஜ் வாஷிங்கடனோ பெஞ்சமின் ஃபிராங்க்ளினோ இந்த செயலுக்கு ஒப்புதல் அளிக்கவில்லை.

மார்ச் 1956 இல், தொண்ணூறு கறுப்பினப் பிரதிவாதிகள் அலபாமாவின் மாண்ட்கோமேரியில் உள்ள நீதிமன்றத்தில் விசாரணைக்காகக் காத்திருந்தனர், "நியாயமான காரணமோ அல்லது சட்டப்பூர்வ காரணமோ இல்லாமல்" நிறுவனத்தின் வணிகத்தில் தலையிட்டதாக குற்றம் சாட்டப்பட்டது. நகரப் பேருந்துகளில் நிறவேற்றுமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அவர்கள் புறக்கணிப்புப் போராட்டத்துக்கு ஏற்பாடு செய்திருந்தனர். மார்ட்டின் லூதர் கிங், ஜூனியர், அனைத்து தென் மாநிலங்களிலும் பிரிவினைக்கான காரணத்தை எடுத்துக் கொண்டார், மேலும் ஒரு தசாப்த காலப்பகுதியில் வன்முறையற்ற எதிர்ப்பை நடத்தினார். அவரது இயக்கத்தின் நீடித்த செல்வாக்கு பலருக்கு அடக்குமுறையின் முடிவைக் கொண்டு வந்தது. இன்றைய ஊடகங்கள் மார்ட்டின் லூதர் கிங்கை மரியாதையுடன் எழுதினாலும், அந்த காலத்தில் அவர் ஒரு அராஜகவாத சீர்குலைப்பாளராக சித்தரிக்கப்பட்டார்.

கொலம்பியா பல்கலைக்கழகத்தின் சர்வதேச மற்றும் பொது விவகாரப் பள்ளியின் அரசியல் அறிவியல் பேராசிரியர் ராபர்ட் ஷாபிலோ சமீபத்தில் இவ்வாறு எழுதினார்- "ஒரு போராட்டத்தின் பார்வை மற்றும் முக்கியத்துவத்தை உணரும்போது, அந்த போராட்டத்தின் மீதான பொது கருத்து மாறும்."

இஸ்ரயேலுக்கு எதிரான போராட்டங்கள் மற்றும் யூத விரோதத்தின் எழுச்சி நாடு முழுவதும் உள்ள நகரங்களில், நெடுஞ்சாலைகள் தடை செய்யப்பட்டுள்ளன, ரயில்கள் தாமதமாகி வருகின்றன மற்றும் நூற்றுக்கணக்கான போராட்டங்களால் கல்லூரி வளாகங்களின் பிரிவுகள் மூடப்பட்டன. கல்லூரி வளாகங்களில் போராட்ட முகாம்கள் அமைக்கப்பட்டன. இந்த எதிர்ப்பாளர்கள் தங்கள் சொந்த அடக்கு முறையை எதிர்த்துப் போராடவில்லை, ஆனால் அக்டோபர் 7,2023 பயங்கரவாதத் தாக்குதல் மற்றும் பணயக்கைதிகள் ஆகியவற்றிற்கு பதிலளிக்கும் விதமாக ஹமாஸுக்கு எதிராக இஸ்ரயேலின் தற்காப்பு நகர்வுகளுக்குஎதிராக போராடினார்கள். காஸாவில் நிரந்தர போர் நிறுத்தம், இஸ்ரயேலுக்கான அமெரிக்க இராணுவ உதவியை நிறுத்துதல் மற்றும் ஆயுத விநியோகஸ்தர்களிடமிருந்து நிதி விலக்கு போன்ற கோரிக்கைகளை போராட்டங்கள் கோருகின்றன. போராடியதற்காக நடவடிக்கைக்கு எடுக்கப்பட்டவர்கள் அல்லது பணி நீக்கம் செய்யப்பட்டவர்களுக்கு மன்னிப்பு கோருகிறார்கள். இஸ்ரயேலுக்கும் அரேபியர்களுக்கும் (பாலஸ்தீனியர்கள்)1.இடையே நிரந்தரமாக நிலத்தை பிரிக்க அமெரிக்க தலையீட்டை பலர் விரும்புகிறார்கள்.

(1)1948 இல் இஸ்ரயேல் சுதந்திரம் அடையும்



வரை, சர்வதேச பத்திரிகைகள் அந்த பகுதியில் வாழ்ந்த யூதர்களை (அரேபியர்கள் அல்ல) பாலஸ்தீனியர்கள் என்று முத்திரை குத்துவது பொதுவானது. சக்கரி ஃபோஸ்டரின் கூற்றுப்படி, பாலஸ்தீனத்தின் அரபு மொழி பேசுபவர்களை விவரிக்க "பாலஸ்தீனியர்" என்ற வார்த்தையை முதன் முதலில் பயன்படுத்தியது 1898 இல் கலீல் பேதாஸ், பெய்ரூட்டை தளமாகக் கொண்ட ஆர்த்தடாக்ஸ் கிறிஸ்தவரான ஃபரித் ஜார்ஜஸ் கசாப், 1909 ஆம் ஆண்டு தனது பாலஸ்தீனம், ஹெலனிசன் கிளேரிகலிசம் புத்தகத்தின் எல்லா பகுதியிலும் பாலஸ்தீனத்தின் அரபு மொழி பேசுபவர்களை பாலஸ்தீனியர்கள் என்று விவரித்தாலும் "ஆர்த்தடாக்ஸ் பாலஸ்தீனிய ஒட்டோமான்கள் தங்களை அரேமியர்கள் என்று அழைக்கிறார்கள், அவர்கள் உண்மையில் அரேபியர்கள்" என்று குறிப்பு சொல்லியிருக்கிறார்."

இந்த போராட்டங்கள் 2023ல் உலகளவில் யூத எதிர்ப்புச் சம்பவங்கள் இரட்டிப்பாவதற்கு நேரடியாக வழிவகுத்தன. ஆன்டி டிப.ஃமேஷன் லீக் (**Anti-Defamation League (ADL)**) மற்றும் டெல் அவிவ் பல்கலைக்கழகம் (**Tel Aviv University (TAU)**) ஆகியவற்றின் கூட்டு அறிக்கையின்படி, 2023 இல் மட்டும், 3700 க்கும் மேற்பட்ட நிகழ்வுகளுடன், ஒரு வருடத்தில் இதுபோன்ற சம்பவங்கள் அதிகம் நடந்ததற்காக அமெரிக்கா தேசிய சாதனை படைத்துள்ளது. 2022 ஆம் ஆண்டில் இதே காலகட்டத்தில் நான்கு மடங்காக நடந்தது. பிரான்ஸில் 2023 இல் கிட்டத்தட்ட 2022 இல் நடந்ததை விட நான்கு மடங்கு அதிக நிகழ்வுகள் நடந்தன - மொத்தம் 1,600க்கும் அதிகமானவை - அதே நேரத்தில் இங்கிலாந்து கிட்டத்தட்ட 2,500 சம்பவங்கள் ஒவ்வொரு ஆண்டும் அதிகரிப்பதை கண்டது. ஜெர்மனியிலும் 2023 இல் கணிசமாக அதிகரித்தது. **TAU** பேராசிரியாரான உரியா ஷாவித்தின் கருத்துப்படி, யூத விரோதத்தின் தற்போதைய நிலை இன்னும் ஹோலோகாஸ்டிற்கு வழிவகுக்கும் மட்டத்தில் இல்லை, ஆனால் மேற்கில் யூத வாழ்க்கையின் இருப்பை அச்சுறுத்துகிறது. இப்போது ஏழு மில்லியனுக்கும் அதிகமான யூதர்களைக் கொண்ட இஸ்ரயேலுக்கான கடைசி பெரும் குடியேற்றம்,



உலகில் யூதர்களின் இரண்டாவது பெரிய மக்கள் தொகையைக் கொண்ட அமெரிக்கா உட்பட மேற்கத்திய நாடுகளிலிருந்து வரப்போவதாக பல வேத மாணவர்கள் நம்புகிறார்கள்.

ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக ஆக்கிரமித்துள்ள வேதத்திலுள்ள நிலத்தையும் தன்னையும் பாதுகாத்துக் கொள்ளும் இஸ்ரயேலின் உரிமைக்கான சர்வதேச ஆதரவு குறைந்து வருகிறது. இஸ்ரயேல் ஒரு கடினமான பாடத்தைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்பதை வேத மாணவர்கள் உணர்கிறார்கள். தேவன் மட்டுமே அவர்களைக் காக்க முடியும் (யாத்திரகமம் 5:1, லூக்கா 1:68 ) இஸ்ரயேலின் தலைமை அதன் பாரம்பரிய நட்பு நாடுகளின் அழுத்தத்திற்கு அடிபணிவதால் ஆபத்து தீவிரமடைகிறது.

ஒருவேளை மிக சமீபத்தில் "உன் நேசர் யாவரும் உன்னை மறந்தார்கள்" (எரேமியா 30:14) என்பதை இஸ்ரயேல் உணர்ந்து கொள்ளும். துரதிர்ஷ்டவசமாக, கிட்டத்தட்ட 2,000 ஆண்டுகளுக்கு முன்பு அவர்கள் சிதறி வாழ்ந்த அந்நியர்களின் நாடுகளில் வாழும் யூதர்களுக்கு, யூத எதிர்ப்பு எப்போதும் போல் இன்றும் உயிருடன் இருக்கிறது. இப்போது, யூத எதிர்ப்பு உணர்வு இஸ்ரயேலுக்கு எதிரான உணர்வுடன் இணைக்கப்பட்டுள்ளது. எல்லாவற்றிலும் சாதகமான நிலை இருந்தபோதிலும், யூத மக்கள் அறிவியல், மருத்துவம், போன்றவற்றில பங்களித்துள்ளனர், இருப்பினும் இஸ்ரயேலுக்கான பொது உணர்வு குறைகிறது.

ஒருதசாப்தத்திற்கும் மேலாக, இஸ்ரயேலில் பொது மக்கள் மீது ஏவுகணைகள், மோட்டார்கள் மற்றும் ராக்கெட்டுகளை ஹமாஸ் ஏவியது ஐக்கிய நாடுகள் சபையிடமிருந்து எந்த எதிர்ப்பையும் பெறவில்லை. மாறாக, எதிர்ப்புகள் இப்போது யூதர்கள் மற்றும் இஸ்ரயேலுடன் நாஜி படங்களை இணைக்கின்றன. முரண்பாடாக, உலக ஊடகங்களின் பார்வையில், ஹமாஸ் மற்றும் ஹிஸ்புல்லா வெறும் "சுதந்திரப் போராளிகள்" சரியான நேரம் வரும்போது, யெகோவா தேவன் தலையிடுவார் "சம்பவிப்பதென்னவென்றால்

- யூதா வம்சத்தாரே, இஸ்ரயேல் வம்சத்தாரே, நீங்கள் புறஜாதிகளுக்குள்ளே சாபமாயிருந்தது போலவே, ஆசீர்வாதமாயிருக்கும்படி நான் உங்களை இரட்சிப்பேன், பயப்படாதேயுங்கள், உங்கள் கைகள் திடப்படக்கடவது (சகரியா 8:13) தந்தை ஆபிரகாமுக்கு உண்மையான வாக்குறுதி பரம கானான் அல்ல, பூமியில் வாக்களிக்கப்பட்ட தேசம். தேவன் ஆபிராகாமுக்கு நித்திய உடைமையாகப் பெறும் தேசத்தைக் காட்டினார் - "உன் கண்களை ஏறெடுத்து, நீ இருக்கிற இடத்திலிருந்து வடக்கேயும், தெற்கேயும், கிழக்கேயும், மேற்கேயும் நோக்கிப்பார். நீ பாரக்கிற இந்தப் பூமி முழுவதையும் நான் உனக்கும் உன் சந்ததிக்கும் என்றைக்கும் இருக்கும்படி கொடுத்து, உன் சந்ததியைப் பூமியின் தூளைப்போலப் பெருகப்பண்ணுவேன். ஒருவன் பூமியின் தூளை எண்ணக்கூடுமானால் உன் சந்ததியும் எண்ணப்படும். நீ எழுந்து தேசத்தின் நீளமும் அகலமும் எம்மட்டோ, அம்மட்டும் நடந்து திரி, உனக்கு அதைத் தருவேன் என்றார்." (ஆதியாகமம் 13:14-17)


ஆபிரகாம் மூலம் ஒரு பெரிய தேசத்தை உருவாக்குவதாக வாக்குறுதியளித்த தேவனின் நோக்கம், ஈசாக்கு மற்றும் யாக்கோபுக்கும் - பின்னர் தேசமான இஸ்ரயேலுக்கும் - அவர்களை தேசத்தில் நிலைநிறுத்தி, அவர்களை அனைத்து மக்களுக்கும் நன்மை செய்பவர்களாக மாற்றுவதாகும். "உன் (யாக்கோபு) சந்ததி பூமியின் தூளைப்போலிருக்கும், நீ மேற்கேயும், கிழக்கேயும், வடக்கேயும் தெற்கேயும் பரம்புவாய், உனக்குள்ளும் உன் சந்ததிக்குள்ளும் பூமியின் வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும்." (ஆதியாகமம் 28:14)

அப்போஸ்தலனாகிய பவுல்" உங்களுக்குக் கிடைத்த இரக்கத்தினாலே (இஸ்ரயேல்) இரக்கம் பெறுவார்கள்" (ரோமர் 11:31) என்று கூறியதை கிறிஸ்தவர்கள் நினைவில் கொள்ள ஊக்குவிக்கப்படுகிறார்கள். வேறு எந்த அனுதாப மனப்பான்மையும் தேவனின் கருணையுடன் ஒத்துப்போவதில்லை. இப்போதைக்கு - அதிகரித்து வரும் யூத எதிர்ப்பு உலகில் - இஸ்ரயேலின் தீர்க்கதரிசன விதியை உலகிற்கு ஒரு ஆசீர்வாதமாக நம்புவதற்கு யூத ஜனங்களை ஆதரிப்பதும் ஊக்கவிப்பதும் ஆகும். ஏசாயா தீர்க்கதரிசி மூலம் அறிவுறுத்தப்பட்டபடி கிறிஸ்தவர்கள் இஸ்ரயேலுக்கு ஆறுதல் மற்றும் ஊக்கமளிக்க வேண்டும்.

"என் ஜனத்தை ஆற்றுங்கள்,தேற்றுங்கள், எருசலேமுடன் பட்சமாய்ப் பேசி, அதின் போர் முடிந்தது என்றும், அதின் அக்கிரமம் நிவிர்த்தியாயிற்று என்றும், அது தன் சகல பாவங்களினிமித்தமும் கர்த்தரின் கையில் இரட்டிப்பாய் அடைந்து தீர்ந்தது என்றும், அதற்குக்

தனிச்சுற்றுக்கு மட்டும்

மேலும் தகவல் மற்றும் புத்தக தேவைகளுக்கு தொடர்பு :




www.herald-magazine.com